# பூம்புகார்

ஆசிரியர்

அறுவர்

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு

1973

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

நூல் சேர்க்கை

எண். ........................

சென்னை-600 008


முதற் பதிப்பு. 1973.
தொ. பொ. ஆ. துறை. எண் 28

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை


ஆசிரியர்
அ று வ ர்

விலை : ரூ. 1-00

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப் பெற்றது.



காவிரி கடலில் புகுமிடம்.



சம்பாபதி அம்மன் கோயில்





வாயிற்காப்பு, சம்பாபதி அம்மன் கோவில், பூம்புகார்.

# பூம்புகார்

இரா. நாகசாமி

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலியுலகிற்கவன் குலத்தோடோங்கிப்
பரந்தொழுகலான்.

என்று சிலப்பதிகாரத்தில் போற்றப்பட்டுள்ளது, காவிரிப்பூம்பட்டினம். கடல் சூழ்ந்த உலகில், சோழர் குலம் பாடுவார் அனைவரும், பூம்புகாரைப் போற்றுவாராதலின் நாமும் பூம்புகாரைப் போற்றுவோம் என்று இளங்கோவடிகளால் புகழப்பட்டது இந்நகரம். புகார் என்றால் ஆறு கடலில் சங்கமம் ஆகும் இடம். பூம்புகார் என்பது காவிரியாறு கடலில் புகும் இடம் என்பது யாவரும் அறிந்ததாகும். இந்நகருக்கு பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம், காகந்தி, சம்பாபதி, பலர் புகழ் மூதூர், மண்ணகத்து வான்பதி, சோழபட்டினம், சபேரிஸ் எம்போரியம், கோலபட்டணம் என்று பல பெயர்கள் உண்டு. அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, முத்தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்தொண்டர் புராணம் முதலிய தமிழ் நூல்களும், மிளிந்தபண, ஜாதகக் கதைகள், அபிதம்மாவதாரம், புத்தவம்சாத்தகதா முதலிய பிராகிருத நூல்களும், தாலமி எழுதிய பூமி நூல், பிளினி எழுதிய நூல், பெரிப்ளஸ் மெரிஸ் எரித்ராய் முதலிய வெளிநாட்டார் எழுதிய நூல்களும், கல்வெட்டுகளும் இந்நகரின் சிறப்பைக் குறிக்கின்றன.

பூம்புகாருக்கு, சம்பாபதி என்பது பழைய பெயர். சம்பு அல்லது சம்பாபதி என்பவள் அந்நகரின் தெய்வம். காந்தன் என்ற சோழ மன்னனின் வேண்டுதலுக்கேற்ப காவிரிப்பாவை அந்நகரிலே தோன்ற, அவளை சம்பாபதி வரவேற்ருள். அம் முது தெய்வத்தை, காவிரி தொழு தாள். 'என் பெயர் பெற்ற இம்மூதூர் இனி உன் பெயரால் அழைக்கப்படும், என்று சம்பாபதி கூற அந் நகர் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் பெற்றது என்று மணிமேகலை குறிக்கிறது. அரச குலத்தை அழித்து வந்த பரசுராமருக்குப் பயந்து காந்தன் என்ற சோழ மன்னன், காவற் கணிகையின் புதல்வன் ககந்தன் என்பவனை அந்நகருக்குக் காவலாக நிறுத்திச் சென்ருன். ககந்தனுல் காக்கப்பட்டதாதலால் காகந்தி என்றும் இந்நகர் அழைக்கப்பட்டது என்பர்.

வட இந்தியாவில் பார்குத் என்ற இடத்தில் ஒரு பௌத்த ஸ்தூபம் இருந்தது. அப்பகுதியை கி.மு. இரண்டாம் நூற்ருண்டில் ஆண்ட சுங்க மன்னர்களின் காலத்தில் எழில் வாய்ந்த சிற்பங்களால் அந்த ஸ்தூபம் அழகு செய்யப்பட்டது. அக்காலத்திய சிற்பங்களும், கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அங்கு கிடைத்த ஒரு கல்தூண், காகந்தி நகரைச் சேர்ந்த 'சோமா' என்ற பிக்குணியால் தானமாக அளிக்கப்பட்டது என்று கல்வெட்டுக் கூறுகிறது. காகந்தி என்பது பூம்புகாரின் மற்ருெரு பெயர் என்று பார்த்தோம். கி.மு. இரண் டாம் நூற்ருண்டிலேயே பூம்புகார் சிறந்த நகராக விளங்கியது என்பதற்கு இதுவே சான்று.

புகார் நகரைத் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், முசுகுந்தன், மனுநீதி சோழன், கரிகால் பெருவளத்தான், கிள்ளிவளவன் போன்ற சிறந்த சோழ மன்னர்கள் ஆண்டிருக்கிருர்கள். தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் காலத்தில் இந்திர விழா சிறப்பாக நடத்தப்பட்டது. முசுகுந்த சோழன் ஒரு சமயம் அமரர்க்கு உதவி செய்தான். அப்போது அசுரரால் ஏற்பட்ட துயரை, பூதம் ஒன்று போக்கியது. அதனுல் அப்பூதத்தை பூம்புகாரில் நாளங்காடியில் பிரதிட்டை செய்து வழிபட்டனர். கரிகாலன் காலத்தில், பூம்புகார் நகர் சிறப்பாக விரிவாக்கப்பட்டது எனலாம்.

## நகர அமைப்பு :

பூம்புகார் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது என்று சிலப்பதிகாரத்தில், இந்திரவிழா ஊரெடுத்த காதையில் காணலாம். இந்நகரின் அமைப்பைக் காணும் போது இப்பட்டினம் நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்டது என்பது புலனுகும். சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டுக் கட்டப்பட்ட சிறந்த பட்டினத்திற்கு அது எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. அக்காலத்திலேயே தமிழகத்தில், ஊரமைப்பும், நகர அமைப்பும் மிகச் சிறந்த நிலையை அடைந்திருந்தன என்றும் இதிலிருந்து அறியலாம். பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில், மயன் என்ற பெரும் தச்சன் போற்றப்பட்டுள்ளான். அவனுடைய நூல் தமிழகத்தில் மட்டும் பெரும்பாலும் பின்பற்றப்பட்டது. எனவே பூம்புகார் நகரம் மயனுடைய

நூலைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாக இருக்குமோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. பூம்புகார் நகரம் மருவூர்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பகுதிகளுக்கும் இடையில் மரங்கள் அடர்ந்த பகுதியில் நாளங்காடி இருந்தது. புகாரின் கடற்கரைப் பகுதியில் மீனவர்களின் சேரி இருந்தது. துறைமுன்றில் கலங்களில் வந்து இறங்கும் பொருள்களைச் சேமித்து வைக்க கோட்டகாரங்கள் இருந்தன. மருவூர் பாக்கத்தில் பல தொழில் செய்பவர்கள் தனித் தெருக்களில் வாழ்ந்து வந்தனர். துணி நெய்வோர், பிட்டு விற்போர், அப்பவாணிகர், மீன், இறைச்சி முதலிய விற்போர், தானியம் விற்போர், சித்திரகாரிகள், மண்ணீட்டாளர், இரத்தினத் தட்டார் முதலியோருடைய இருக்கைகள் இருந்தன.

பட்டினப்பாக்கத்தில் அரசனுடைய மாளிகை, அவருடைய சுற்றம், பெருங்குடி வணிகர், உழவர் முதலியோர் வாழ்ந்தனர். கணிகையர், ஆடற்கூத்தியர் முதலிய பெண்கள் வாழ்ந்த தெருக்களும், மருத்துவர் சோதிடர் முதலியோர் இடங்களும், தேர்ப்பாகர், யானை வீரர், குதிரை வீரர், காலாட் படையினர் ஆகியோர் இடங்களும் இருந்தன. புகார் நகரில் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூத சதுக்கம், பாவை மன்றம் என ஐந்து மன்றங்கள் இருந்தன. பண்டகசாலைகளில் பொதிகள் இருக்கும். அவற்றில் அளவு, நிறை, எண் என்று மூன்றும் குறிக்கப்பட்டுப் பெயரும் எழுதப்பட்டிருக்கும். அவற்றை

அவ்வூரிலுள்ளோர் களவு செய்யமாட்டார். வெளி நாட்டார் யாராகிலும் களவு செய்தால், அவர் கழுத்து முறியும்படி பொதியை அவர் தலையில் ஏற்றி ஊரைச் சுற்றிவைக்கும். ஆதலால் கள்ளர் மனதில் நினைத் தாலே நடுக்கம் தரக்கூடியது வெள்ளிடை மன்றம். கூன், குருடு, வியாதியாளர் முதலியோர் மூழ்கி வலம் வந்து பயன் பெறுவது இலஞ்சிமன்றம் என்ற பொய்கை மன்றம். நஞ்சுண்டோர், பேய் பிடித்தோர் முதலியோர் வழிபட்டு நல்லநிலை அடைவது நெடிய கல் நின்ற மன்றம். தவவேடம் பூண்டு ஊரை ஏமாற் றுபவர், கணவரை ஏமாற்றும் பெண்டுகள், பிறர் மனைவியை இச்சிப்போர், அரசைக் கீழாக எண்ணும் அமைச்சர் முதலியோரைத் தன் பாசத்தால் பிடித்து நிலத்தில் அடித்து உண்ணும் பூதசதுக்கம். அரசனோ அல்லது நியாயம் கூறுவார்களோ, தெரியாது ஒரு புறம் கூறினும் கண்ணீர் உகுக்கும் பாவை மன்றம் என்ற ஐந்து மன்றங்கள் அங்கு இருந்தன.

**வனங்கள் :**

பூம்புகாரில் பல வனங்கள் இருந்தன. அரசனும் அவனுடைய சுற்றமும் இருக்கும் இலவந்திகைச் சோலை அங்கு இருந்தது. தேவர்கள் மட்டும் விரும்புவதும் மனிதராலும் வண்டுகளாலும் நுகரப்படாத மலர் மரங்கள் நிறைந்த உய்யானம் ஒன்று இருந்தது. அவ் வனத்தை, பாசத்தைக் கையில் உடைய பூதம் காத்து நின்றது. சூரிய கிரணத்தால் சிறகு இழந்த சம்பாதி என்ற கழுகு இருந்த வனம் ஒன்றும் அங்கி ருந்தது. அதற்கு சம்பாதி வனம் என்றே பெயர்.

அதே போன்று காவிரியின் தந்தையாகிய கவேரன் இருந்த முதிய கவேரவனமும் அங்கிருந்தது. இவை தீண்டி வருத்தும் தெய்வங்களால் காக்கப்பட்டன. உவவனம் என்று ஒரு வனமும் அங்கு இருந்தது. அதன் மத்தியில் பளிங்கு அறை ஒன்று இருந்தது. அதன் மத்தியில் தாமரைப் பீடிகை ஒன்றும் இருந்தது. இவ் வைந்து வனங்களும் காவிரிப்பூம்பட்டினத்தின் எந்தப் பகுதியில் இருந்தன என்று தெரியவில்லை. ஒருகால், ஆற்றின் அருகில் இருந்தனவோ என எண்ண வேண்டி யிருக்கிறது.

இவை தவிர பூம்புகாரில் ஈமப்புறங்காடு ஒன்றும் இருந்தது. அது மதில்சூழ்ந்து நான்கு புறங்களில் வாயில்களோடு இருந்தது. ஒரு புறத்து வாயிலில் தேர்களின் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. மற்றும் ஒரு வாயிலில் நெல், கரும்பு, நீர், சோலை முதலியன ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தன. மூன்றும் வாயில் வெளியாக இருந்தது. நான்காம் வாயிலில் மடித்த வாயும், கையில் பாசமும், சூலமும் பிடித்து, நின்ற நிலையில் மண்ணீட்டால் செய்யப்பட்ட பூதம் இருந்தது. அந்த ஈமக்காட்டின் உள்ளே காளி கோவில் ஒன்றும் இருந்தது. அங்கு இடுவோர், சுடுவோர், தொடு குழி யில் புதைப் போர், தாழ்வயில் அடைப் போர், முது மக்கள் தாழியிற் கவிப்போர் எனப் பல ஈமச்சடங்குகள் செய்வோர்களும் வருவர். அக்காட்டைக் காத்து நின்ற காவலர்களின் குடிசையும் உள்ளேயே இருந்தது.

ஈமப்புறங் காட்டின் புறத்தில், சம்பாபதியம்மனுக்கு ஒரு கோயில் இருந்தது. அதில் பல மண்ணீட்டாலான

உருவங்கள் செய்து வைக்கப்பட்டிருந்தன. அதன் அருகில் உலகவறவி என்ற மண்டபம் இருந்தது என்றும் அறிகிறோம்.

**கோயில்கள் :**

பூம்புகாரில் சிவபெருமான் கோயில் முதல் சதுக்கப் பூதம் வரை பல கோயில்கள் இருந்தன. கல்பவிருக்ஷத்தின் கோயில் இந்திரனுடைய ஐராவதத்தின் கோயில், பலராமர், சூரியன், சிவபெருமான், முருகன், வச்சிராயுதம், மாசாத்தன், சந்திரன், சமணர் முதலிய பல தெய்வங்களின் கோயில்கள் இருந்தன. திருமால், பாம்பணைப் பள்ளியில் படுத்தவராகக் காட்சியளித்த மணிவண்ணன் கோட்டம் இருந்தது. பௌத்த மகா சைத்யம் (ஸ்தூபம்) ஒன்றும், இந்திரன் மதம் என்ற நூலைப் பின்பற்றிக் கட்டப்பட்ட விஹாரங்கள் ஏழும் இருந்தன. விஹாரம் என்றால் பௌத்தத் துறவிகள் வாழும் இடம் என்பதாகும்.

இவை தவிர, நதிக்கரையின் அருகில், மரங்கள் அடர்ந்த குளிர்ந்த, திருமஞ்சனப் பெருவழி ஒன்றும் இருந்தது. புறச்சேரியில் உறை கிணறுகள் இருந்தன. பூம்புகாரைச் சுற்றிலும் கோட்டை மதில்கள் இருந்தனவா என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும் புலிப்பொறி இட்ட போர்க் கதவுகள் இருந்தன என்று குறிப்பதிலிருந்து இந்நகரைச் சுற்றிலும் மதில் சுவர்கள் இருந்தன என்று ஊகிக்க இடமிருக்கிறது.

மக்கள் வாழ்க்கை:

இவ்வளவு சிறப்பாக அமைந்த பட்டினத்து மக்களின் வாழ்க்கையைப் பற்றி, பட்டினப்பாலை மிக அழகாகச் சித்திரிக்கிறது. பல மொழி பேசும் மக்கள் இங்கு ஒரு குடிமக்கள் போல் கலந்து வாழ்ந்தனர். சிறப்பாக மீனவர்களுடைய பழக்க வழக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன. பூம்புகார் பட்டினம், பண்டைய நாளிலிருந்தே வாணிபத்தில் சிறப்புற்றிருந்தது. அங்கு வாழ்ந்த வாணிபப் பெருங்குடி மக்கள் தங்கள் குலத்திற்கு இழுக்கு நேரக் கூடாது என அஞ்சி, நேர்மை என்பதே தவறாது வாழ்ந்தனர் தாங்கள் கொடுப்பதற்கு மேல் பொருள் கொள்ளாமல், தங்களிடம் வாங்குவோரிடம் பெற்றதற்குக் குறைத்துப் பொருள் கொடாமல் உயர் வாழ்வு வாழ்ந்தனர். உப்பை உள் நாட்டில் கொண்டு விற்று, அதற்குப் பதிலாக நெல் பெற்று நாட்டுப் படகுகளில் கொணர்ந்தனர். மேலை நாடுகளிலிருந்து உயர்ந்த ஜாதிக் குதிரைகள் வந்து இறங்கின. மாட்டு வண்டியில் மிளகு மூட்டைகள் வந்திறங்கின. வடதிசையிலிருந்து வந்த மணியும், பொன்னும், குட திசையிலிருந்து வந்த சந்தனமும், அகிலும், தென் கடலில் கிடைத்த முத்தும், கீழ்க்கடலில் கிடைத்த பவழமும், கங்கையாற்றுப் பொருள்களும், காவிரியாற்றுப் பொருள்களும், ஈழத்திலிருந்து வந்த பொருள்களும், மற்ற நாடுகளிலிருந்து வந்த கர்ப்பூரம் போன்ற பொருள்களும் ஏராளமாக விற்கப்பட்டன.

பண்டகசாலைகள் கரையோரமாக இருந்தன. அங்கு கலத்திலிருந்து ஏராளமான பொருள்கள் இறங்கின.

கரையிலிருந்த கலங்களில் பொருள்கள் ஏற்றப்பட்டன. அங்கு அரசனுக்காகச் சுங்கம் கொள்வோர் அயராமல் சுங்கம் வசூலித்தனர். பொதிகளின்மேல் புலிப்பொறி இட்டனர். வலிமை மிக்க காவலர்கள் பண்டகசாலையைக் காத்து நின்றனர் என இலக்கியங்கள் கூறுகின்றன.

## அயல்நாட்டுத் தொடர்பு:

பூம்புகார் மேலைநாடுகளுக்கும், கீழைநாடுகளுக்கும் இடையே சிறந்த துறைமுகமாக இருந்தது என அக் காலத்தில் எழுதப்பட்ட மேலைநாட்டு நூல்களிலிருந்து அறிகிறோம். பூம்புகாரைப் பற்றி சிறப்பாக தாலமி எழுதிய பூமி நூலும், அலெக்சாண்டிரியா நாட்டு வணிகன் ஒருவன் கி.பி. 81-லிருந்து 96-க்குள் எழுதிய "பெரிப்ளஸ் மெரிஸ் எரித்ராய்" என்ற நூலிலும், குறிப்புகள் காணப்படுகின்றன. தாலமி தன் நூலில் இதை "சபேரிஸ் எம்போரியம்" என்று குறித்துள்ளார். "பெரிப்ளஸ்" என்ற நூலில் கொல்சிக்கும் அப்பால் கடற்கரை நாடு ஒன்று உள்ளது. "அரகரு' என்ற உள்துறை நாடும் உள்ளது" என்று குறிக்கப் பட்டுள்ளது கடற்கரை நாடு என்பது பூம்புகாரை யும், அரகரு என்பது உறையூரையும் குறிக்கும். பெரிப்ளஸ் என்ற நூலில், மூன்று விதமான கலங்கள் தமிழ்நாட்டுக் கடற்கரையில் இருந்ததாகக் குறிக்கப் பட்டுள்ளது. சோழ மண்டலக் கரையிலிருந்து மேலைக் கடற்கரை வரை, கரையோரமாகவே செல்லும் நாட்டுப் படகுகள். அடுத்து பெரிய மரங்களைக் கட்டி செய்த கட்டுமரங்கள். இவற்றிற்கு 'சங்கர' என்று பெயர். மூன்றாவதாக மலேயா, சுமத்ரா, கங்கைக் கரை முதலிய

இடங்களுக்குச் செல்லும் மிகப் பெரிய "சோழந்தியா" என்ற கலங்கள் இருந்தன. அக்காலத்தில் கடல் வாணிபத்தில் பெரும்பகுதி, சோழர்கள் கையிலிருந்தது. ரோமானிய வர்த்தகர்கள் தமிழ்நாட்டோடு நின்று விடுவர். மலேயா, சீனம் முதலிய நாடுகளுக்குத் தமிழக வணிகர்களே சென்று வந்தனர். தமிழ்நாட்டிலிருந்து பருத்தியும் பட்டும் முக்கியமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. இவை அலெக்சாண்டிரியா நாட்டுத் தொழிற்சாலைகளில் வேயப்பட்டன. ரோமானிய நாட்டிலிருந்து கண்ணாடி, உலோகங்கள், லினன் முதலியவை இங்கு அனுப்பப்பட்டன. ரோமானிய வணிகர்கள், தமிழ்நாட்டு அரண்மனைகளில் பணிபுரிய பெண்களை இங்கு கொணர்ந்தனர். சாடிகளும், சிறந்த பானங்களும் மேலை நாடுகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்தன. ரோமானியர்கள் மிளகு, தந்தம், வாசனைப் பொருள்கள், முத்து, பவளம் முதலியவைகளைக்கொண்டு அவற்றிற்கு பதிலாக தங்கத்தையும், வெள்ளியையும் கொடுத்தனர். முதன்முதலில் மேலைநாட்டு வாணிபம், அரேபியா நாட்டு துறைமுகங்கள் வழியாக நடந்தது. அலேக்சாண்டிரியா நாட்டு ஹிப்பாலஸ் என்பவர் பருவக் காற்றின் போக்கை அறிந்து கூறியவுடன் அந்நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் நேர்முக வாணிபம் பெருகியது. கி.பி. மூன்றும் நூற்றாண்டிற்குப் பின்னர் ரோமானிய பேரரசின் வீழ்ச்சியோடு வாணிபம் வீழ்ந்தது.

## பிராகிருத நூல்களில் பூம்புகார் :

பூம்புகாரைப் பற்றிச் சில பிராகிருத நூல்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. கி. மு. முதல் நூற்

ருண்டைச் சார்ந்த "மிளிந்தபண" என்ற நூலில் கோலப் பட்டணம் என்று புகார் குறிக்கப்பட்டுள்ளது. அகீர்த்தி என்பவன் காசிமா நகரை விட்டு தமிழ் நாட்டுக் காவேரிப்பட்டணத்தில் ஒரு வனத்தில் இருந்த தாகப் பௌத்த ஜாதகக் கதைகளிலிருந்து அறிகிறோம். புத்ததத்தர் என்ற பௌத்தப் பெரியார், அபிதம்மா வதாரம், புத்தவம்சாத்தகதா என்ற நூல்களை இயற்றி யுள்ளார். இவ்விரண்டு நூல்களிலும் அவர் காவிரிப் பட்டணத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அங்கு உயர்குடி மக்களாகிய ஆண்களும் பெண்களும் நிரம்பி வாழ்ந்தனர். அது மிகவும் விசாலமானது. ஒரு நகரத் திற்கு வேண்டிய எல்லா அங்கங்களும் உடையது. குற்றமற்ற காவிரி நீரும், கடல் நீரும் அங்கு உள்ளன. எல்லாவித இரத்தினங்களும் அங்கு கிடைத்தன. பல் வேறு விதமான கடைத் தெருக்கள் அங்கு இருந்தன. மனதுக்கு இன்பம் தரும் பல வனங்கள் அங்கு இருந் தன. கைலாயத்தை ஒக்கும் சிகரங்களோடு கூடிய மாளிகைகள் அங்கு சூழ்ந்திருந்தன. அவ்வளவு எழில் மிகுந்த காவேரிப்பட்டணத்தில் கணதாஸன் என்ற சாதுவால் கட்டப்பட்ட மனதுக்குகந்த விஹாரம் ஒன்று இருந்தது. அதில் பல அழகிய திருச்சுற்றுக்களும், கோபுரங்களும் இருந்தன. அங்கு பழைமையான மாளிகையில் இருந்தபோது இந்நூலை இயற்றினேன் என்று புத்ததத்தர் குறிக்கிறார். அவர், தான் இயற்றிய 'விநய விநிச்சியம்' என்ற மற்றொரு நூலில் சோழ நாட்டை அச்சுத விக்ராந்தன் என்ற களப்ர மன்னன் ஆண்டபோது தான் நூல் இயற்றியதாகக் குறித்துள் ளார். தமிழகத்தில் பல்லவர்களில் ஆட்சி தலைதூக்கு

வதற்கு முன்பு, அச்சுத விக்ராந்தன் ஆண்டிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இது சிலப்பதிகார மணிமேகலை காலத்திற்கும் பிந்திய தாக இருக்க வேண்டும்.

பூம்புகார், சங்க கால சோழ மன்னர்களுடைய காலத்தில் சிறந்த பட்டணமாகத் திகழ்ந்தது. மணி மேகலையில், இந்திரவிழா நடைபெறாததால், காவேரிப் பட்டணம் கடலில் மூழ்கிற்று என்று குறிக்கப் பட்டுள்ளது. காவேரிப் பட்டணத்தின் ஒரு பகுதி மூழ் கிற்றா அல்லது பெரும்பகுதி மூழ்கிற்றா என்பது விளங்க வில்லை. அதன் பின்னர் சோழநாடு களப்பிரர் வசம் ஆயிருத்தல் வேண்டும். கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அது பல்லவர் வசமாயிற்று. அக்காலத் தில் அங்கு எழுப்பப்பட்ட கோயிலே பல்லவனீச்சுரம் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும் அப்பர், ஞான சம்பந்தர் என்ற இரண்டு பெரியார்களும் இந்நகரைப் போற்றியுள்ளனர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை இந்நகர் பல்லவர் ஆதிக்கத்தில் இருந்திருக்க வேண்டும். கி.பி. 850க்குப் பிறகு இது மீண்டும் சோழர் வசமா யிற்று. இவ்வூரின் அருகில் உள்ள சாயாவனம் கோயி லில் பண்டைய கல்வெட்டுகள் உள்ளன. இராஜராஜ (இரண்டாம்) சோழனுடைய கல்வெட்டில் இவ்வூர் இராஜாதிராஜ வளநாட்டு நாங்கூர் நாட்டு, காவிரிப் பூம்பட்டினம் என்று குறிக்கப்பட்டுள்ளது. விக்கிரம சோழனுடைய 5-ஆம் ஆண்டுக் கல்வெட்டில், இவ்வூர் புகார் நகரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. 13-ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசை வீழ்த்தக் காரணமா

யிருந்த கோப்பெருஞ்சிங்கன் போசளர்களை வென்று வரும்போது இந்நகருக்கு வந்ததாகவும் அறிகிறோம்.

## தொல் பொருளாராய்ச்சி :

இச்சிறப்பு வாய்ந்த பட்டினத்தை தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர். சுமார் 55 வருடங்களுக்கு முன்பே 1910-ஆம் ஆண்டில் தொல்பொருள் துறை தென் பகுதி சூப்ரண்டெண்டு காவேரிப் பட்டினத்தின் பல பகுதிகளைப் பரிசோதித்துப் பார்த்தார். அப்போதே பல பண்டைய சின்னங்கள் புதைந்து கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டது. முக்கிய மாகக் கடற்கரையின் அருகிலே சில கிணறுகள் பூமிக் கடியில் காணப்பட்டன. இக்கிணறுகளின் புறங்கள் சுடுமண் பூசப்பட்டும் அதன் மேல் கெட்டியான களி மண் பூசப்பட்டும் விளங்கின. இவற்றை 'உறை கிணறு'' என்று அழைப்பர். பட்டினப்பாலையில் கடற் கரை ஓரத்தில் உறை கிணறுகள் இருந்தன என்று "உறைகிணற்றுப் புறச்சேரி" என்று குறிக்கப்பட்டுள் ளது. 1910-ல் இக்கிணறுகள் கண்டு பிடிக்கப்பட்டது சிறப்பான அம்சமாகும். அத்துடன் சம்பாபதியம்மன் கோயில், பல்லவனீச்சுரம் என்ற பகுதிகளில் உயர்ந்த மேடுகள் இருப்பதும், அங்கு பண்டைய சின்னங்கள் கிடைப்பதும், அதை அகழ்ந்து ஆராய வேண்டும் என் றும் குறிப்பிட்டுள்ளார். 1910 லிருந்து 50 ஆண்டு களுக்குப் பிறகு 1960-61-ல் மறுபடியும் மத்திய தொல் பொருள் துறை காவேரிப் பட்டினத்தை அகழ்ந்தாரா யும் முயற்சியை எடுத்துக் கொண்டுள்ளது.

அலைகளால் அரிக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகளின் அடியில் பண்டைய செங்கற்களும் மற்ற சின்னங்களும் தெரிகின்றன. இதுவரை பல பகுதிகளைப் பரிசோதித்துள்ளனர். கீழையூர் என்ற பகுதியில் செங்கற் கட்டிடம் ஒன்று காணப்பட்டது. இதன் அருகில் மரத்தாலான கால்கள் காணப்படுகின்றன. உப்பை நெல்லுக்கு விற்று அதை ஏற்றி வந்த படகுகள் மரத்தறிகளிலே கட்டப்பட்டிருந்தன என்று பட்டினப்பாலை குறிக்கிறது. இப்போது கண்டுள்ள பகுதி அதுவாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். வானகிரி என்றழைக்கப்படும் இடத்தில் ஓர் நீர்த்தேக்கம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது அதன் புறங்கள் செங்கல்லால் உறை எடுக்கப்பட்டுள்ளன. இப்பொய்கை "பிறை நிலா" வடிவிலே அமைந்துள்ளது. காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் வரும் ஓர் வாய்க்கால் இதில் கலக்கிறது. இந்த வாய்க்கால் முழுவதும் செங்கல்லால் எடுக்கப்பட்டதாகும். இதுபோன்று விளங்கியவைகளை "தேப்பிறை யுருவக் கேணி" என்று நம் இலக்கியங்கள் கூறுகின்றன.

அனைத்திலும் முக்கியமான அகழ்வாராய்ச்சி பல்லவனீச்சரத்தில் மேற்கொண்டதாகும். இங்குதான் சதுரமான அறைகளை உடையதும் 60 அடிகளுக்குமேல் நீண்டதுமான புத்த விஹாரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்திலிருந்தும், மணிமேகலையிலிருந்தும் பூம்புகாரில் பௌத்தமதம் சிறந்து விளங்கிற்று என்று அறிவோம். புத்த சைத்யமும், இந்திர விஹாரம் ஏழும் இங்கிருந்தன என்று அந்நூல்களிலி

ருந்து நாம் அறிவோம். இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பல பகுதிகள் இப்பொழுது தொல்பொருள் ஆராய்ச்சியால் வெளிப்படுவது தமிழ் மக்களுக்குப் பெருமை தரும் விஷயமாகும். காவேரிப்பட்டணத்தில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புத்த விஹாரம், ஆந்திர தேசத்தில் நாகர்ஜுனகொண்டாவில் காணப்பட்ட விஹாரத்தைப்போல இருக்கிறது. அச்சுத விக்ராந்தன் இப்பகுதியை ஆண்டபோது கணதாசன் என்பவர் காவேரிபட்டணத்தில் ஒரு புத்த விஹாரம் எடுப்பித்தான் என்று முன்னரே கூறினோம். இங்கு கிடைத்துள்ள விஹாரம் அதுவாக இருக்கக் கூடும்.

மற்றும் இப்பகுதியில் கல்லிலே செதுக்கப்பட்ட புத்த பாதம் ஒன்று கிடைத்துள்ளது. இது அமராவதி, நாகார்ஜுனகொண்டா முதலிய இடங்களில் உபயோகப்பட்ட ஒரு வகைப் பளிங்குக் கல்லாலானது, சுமார் மூன்றரை அடி நீளமும், இரண்டரை அடி அகலமும் உள்ள இப்புத்த பாதத்தில், இரண்டு காலடிகளும், சுவஸ்திகம், பூர்ண கலசம், ஸ்ரீவத்சம் ஆகிய மங்கலச் சின்னங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இதுபோன்றவைகளைத்தான் பீடிகை என்றும் புத்த பீடிகை என்றும் நம் நூல்கள் குறிக்கின்றன. செங்கல்லாலும், சுதையாலும் ஆன தூண்களும், போதிகைகளும் இங்கு கிடைத்துள்ளன.

இங்கு கிடைத்துள்ள பொருள்களில் சில மண் பொம்மைகள் அழகாக உள்ளன. செப்புக் காசுகளும் இங்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவற்றில் சதுரமாகவும், வட்டமாகவும் உள்ள காசுகள் பல இருக்

கின்றன. இக்காசுகளின் முன்புறம் வாலைத் தூக்கி நிற்கும் புலியின் உருவமும் அதன்மேல் சூரியனின் உருவமும் காணப்படுகிறது. பின்புறத்தில் யானையின் உருவம் காணப்படுகிறது. சோழர்களது இலச்சினை யான புலி காணப்படும். இக்காசுகள் கரிகாலன் காலத் தவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அமரர் தருவைச் சின்னமாக உடைய பண்டைய காசு ஒன்றும் காவேரிப்பட்டினத்தில் கிடைத்தது. அது இப் பொழுது சென்னை சாந்தி சதனத்தாரிடம் உள்ளது. வெள்ளையனிருப்பு என்ற இடத்தில் ரோமானிய செப்புக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. பூம்புகாரில் இருந்த யவனரிருக்கையைப் பற்றி முன்பே கூறினோம். ரோமானியக்காசு அதை உறுதிப்படுத்துகிறது. பிற் காலத்தில் வழங்கிய இராஜராஜன் காசுகளும் கிடைத் துள்ளன. புத்தபிரான் தியானத்தில் அமர்ந்திருக்கும் நிலையில் செப்பு விக்ரஹம் ஒன்றும் கிடைத்துள்ளது. பல மணிகளாலான பாசிகளும், கண்ணாடியாலான வளையல்களும், பவழங்களும், சங்கு வளையல்களும் கிடைத்துள்ளன.

1927-ஆம் ஆண்டு காவேரிப்பூம்பட்டினத்தில் மேலையூர் என்ற பகுதியில், அதாவது இப்பொழுது புத்தவிஹாரம் கிடைத்துள்ள பகுதியில் போதிசத்வ மைத்ரேயரின் செப்புத்திருமேனி ஒன்று பூமிக்கடியிலி ருந்து கிடைத்தது. அது இப்பொழுது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது. மிகவும் எழில் வாய்ந்த இச்செப்புத்திருமேனி தங்கமுலாம் பூசப்பட்டு விளங்கு

கிறது. இது எட்டாம் நூற்ருண்டைச் சார்ந்தது. எட்டாம் நூற்ருண்டில் இப்பகுதியைப் பல்லவர் ஆண்டனர். பல்லவ மன்னன் இராஜசிம்மன் ஆண்ட காலத்தில் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்த சைதியம் கட்டப்பட்டது என்று அறிகிருேம். ஆதலின் இங்கு பௌத்த சமயம் எட்டாம் நூற்ருண்டில் சிறந்து விளங்கியது என்று அறியலாம்.



# கல்வெட்டுகளில் காவிரிப்பூம்பட்டினம்

நடன. காசிநாதன்

## பூம்புகார் எனும் காவிரிப்பூம்பட்டினம்

நமது பண்டைய இலக்கியங்களான பட்டினப் பாலை, அகம், புறம், சிலம்பு, மணிமேகலை போன்ற நூல்களாலும் கிரேக்கம், சீனம் போன்ற அயல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருகை புரிந்தோர் இந்தியாவைப் பற்றி எழுதியுள்ள குறிப்புகளாலும் போற்றிப் புகழப்படும் பூம்புகார் எனும் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி சில கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன.

## பார்கூத் கல்வெட்டு

இந்தியாவின் வட பகுதியில் பார்கூத் என்னுமிடத்தில் ஒரு புத்த ஸ்தூபம் உள்ளது. அதன் திருச்சுற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று இப்பொழுது கல்கத்தாவில் உள்ள இந்தியக் கலைக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டு இன்றைக்கு 2200 ஆண்டுகட்கு முற்பட்டது ஆகும். காகந்தியைச் சேர்ந்த சோமா என்ற பிக்குணி, ஸ்தூபத்துக்குக் கொடை அளித்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டில் குறிக்கப்படும் காகந்தி,

காகந்தன் என்பவன் ஆண்டதால் காகந்தி என்று பெயர் பெற்ற காவிரிப்பூம்பட்டினமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவ்வாறெனில் கி.மு 2-ஆம் நூற்றூண்டிலேயே காவிரிப்பூம்பட்டினம் புகழ் பெற்ற நகரமாக இருந்திருக்கிறது என்பதுவும், அங்கு புத்த மதம் சிறந்து விளங்கியது என்பதுவும், அங்கிருந்த புத்த சமயத் துறவி ஒருத்தி பார்கூத்துக்குச் சென்று வாழ்ந்திருக்கிருள் என்பதுவும் தெரிய வருகிறது.

## நடுகல் கல்வெட்டு

அண்மையில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையால் வடார்க்காடு மாவட்டம் செ. கூடலூர் என் னுமிடத்தில், கி. பி. 7-ஆம் நூற்றூண்டில் தமிழகத்தின் ஒரு பகுதியை ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் காலத்திய நடுகல் கல்வெட்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது பாண அரசருடைய மரு மக்களான கந்தவிண்ணனுர் என்பவர் கூடல் என்ற ஊரில் ஆநிரைகளைக் கவர்ந்தபோது பொன்னரம்பனு ரின் சேவகனும் காக்கண்டியைச் சேர்ந்தவனுமான அண்ணுவன் என்பான் அவ்வாநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் கூறுகிறது. இங்கு குறிக்கப் பெற்றுள்ள காக்கண்டி என்னும் ஊர் காகந்தி என்பதின் திரிபாக இருக்கலாம். இது ஏற்றுக் கொள்ளப்பட்டால் கி.பி. ஏழாம் நூற்றூண்டில் காவிரிப்பூம்பட்டினத்துக்குக் காக்கண்டி என்ற பெயர் வழங்கியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

கி.பி. 9-ஆம் நூற்றூண்டுக்குப் பிறகு காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றி பல்லவர், சோழர், பாண்டியர்,

விஜயநகர மன்னர், சரபோஜி மன்னர் ஆகியோர் காலத்தியக் கல்வெட்டுகள் சில செய்திகளைத் தெரிவிக்கின்றன.

### தகுவா-பா கல்வெட்டு

காவிரிப்பூம்பட்டினம் வணிகர்கள் வாழ்ந்த தலம் என்றும், அங்கிருந்து பல பொருள்கள் ஏற்றுமதியாகின என்றும், சீனம் போன்ற கிழக்காசிய நாடுகளிலிருந்து சில நறுமணப் பொருள்கள் இறக்குமதியாகின என்றும் இலக்கியங்கள் எடுத்தியம்பும். அதற்குச் சான்றாகக் கிழக்காசிய நாட்டைச் சேர்ந்த தாய்லாந்து எனப்படும் சயாம் நாட்டில் தகுவா-பா என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கூறும் செய்தி அமைந்திருப்பது வியப்பளிப்பதாக உள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. தமிழில் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டு அங்கு வாழும் நங்கர் உடையான் என்பவன் அங்கே 'அவனி நாரணம்' என்ற குளம் தோண்டி அக்குளத்தைப் பராமரிக்கும் பொறுப்பை மணிக்கிராமத்தார், சேனுமுகத்தார், ஆகியோரிடத்தில் அளித்தான் என்று தெரிவிக்கிறது. இதில் குறிக்கப்படும் மணிக்கிராமத்தார், காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ள மணிக்கிராமத்திலிருந்து சென்றவர்களாக இருக்கலாம் என்றும், இன்று தனியாக விளங்கும் மணிக்கிராமம் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் காவிரிப்பூம்பட்டினத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. எனவே, இன்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பாகக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து சில வணிகர்கள் கிழக்காசிய

நாடுகளுக்குச் சென்று அங்கேயே தங்கி வந்திருக்கின்றனர் என்றும்; அதனுடைய தொடர்ச்சியே இன்றும் சில செட்டிநாட்டு வணிகர்கள் கிழக்காசிய நாடுகளில் வாழ்ந்து வருகிறுர்கள் என்றும் கருத இடமுண்டு.

### தஞ்சைக் கல்வெட்டு

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டு புகாரில் ஆடற்கலை தொடர்ந்து சிறந்து விளங்கியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. புகாருக்கு பெருமை சேர்த்த மாதவி, சிலம்பின் காலத்தில் எவ்வாறு சிறந்து விளங்கினளோ அதைப் போன்றே பல நாட்டிய மகளிர் பிற்காலத்திலும் காவிரிப்பூம்பட்டினத்தில் சிறந்து விளங்கியிருக்கின்றனர்.

### ஆடல் மகளிர்

சோழர் ஆதிக்கத்தை எண் திசையிலும் பரப்பிய சோழப் பெருமன்னன் முதலாம் இராஜராஜன், தான் தென் மேருவாய் உருவாக்கியத் தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடற்கலையில் நன்கு தேர்ச்சி பெற்ற நாட்டியப் பெண்களில் 400க்கு மேற்பட்டவர்களைச் சோழ மண்டலத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வரவழைத்து ஆடவல்லானின் திருமுன்பு ஆடவைத்து, ஆண்டவனே ' நான் ஆடிய நடனத்தையே இவர்கள் தோற்கடித்து விடுவார்கள் போன்று தோன்றுகிறதே ' என்று ஆனந்தப் பரவசமடையும் வண்ணம் ஏற்பாடு செய்து அகமகிழ்ந்தான். அவ்வாறு அங்கு வந்து ஆடிய மகளிர்களுள் புகாரைச் சேர்ந்த பூவையர் இருவர் என்று அறிகிறோம். ஒருவர் பெயர் நக்கன் ஊதாரி. மற்றொருத்தி

யின் பெயர் நக்கன் அரங்கம். எல்லா நாட்டிய மகளிர் களையும் தஞ்சையிலேயே குடி அமர்த்தியிருந்தார். நக்கன் ஊதாரியைத் தஞ்சையின் தெற்குத் தளிச்சேரி யில், தெற்குப் பக்கத்தில் எண்பத்து நான்காம் வீட்டி லும்; நக்கன் அரங்கத்தை, வடக்குத் தளிச்சேரியில், தெற்குப் பக்கத்தில், எண்பதாம் வீட்டிலுமாகத் தங்க வைத்திருந்தார். அவர்களது வாழ்க்கைச் செலவுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 100 கலம் நெல் கொடுத்து வந்தார் என்றும் தெரிவிக்கிறது. இதில் இருந்து காவிரிப்பூம்பட்டினம் பிற்காலச் சோழர் காலத் திலும் ஆடற்கலைக்குப் பெயர் பெற்ற இடமாக இருந் திருக்கிறது என்பதும், அவ்வூரைச் சேர்ந்த ஆடல் மகளிர் பிற இடங்களுக்குச் சென்று தங்களது ஆடற் கலைக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதும் தெரியவருகிறது.

## புகார் முற்றிலும் அழியவில்லை

இன்று கடற்கரையை விட்டு சற்று தொலைவி லுள்ள சாய்க்காடு பல்லவ சோழர் காலங்களில் காவிரிப்பூம்பட்டினத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கிறது. சமயக்குரவர் நால்வருள் ஒருவராகிய ஞானசம்பந்தப் பெருமான் தமது திருப்பதிகத்தில், சாய்க்காட்டு இறைவனைப் பற்றி

'சாய்க்காட்டெம் தலைவன்'

'பூம்புகார்ச் சாய்க்காடே பதியாக உடையான்'

'காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காட்டெம்பரமேட்டி'

என்றும் பாடி பரவசமடைந்திருக்கிறார். இதையே கல்வெட்டுகளும் குறிக்கின்றன. சாயாவனேஸ்வரர்

கோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டு அக்கோயிலில் குடிகொண்டுள்ள நாயகனைக் 'காவிரிப்பூம்பட்டினத்துத் திருச்சாய்க்காடுடையார்' என்றே கூறுகிறது. மேற் கூறப்பட்டுள்ள ஞானசம்பந்தரின் பாடல் வரிகளும் கல்வெட்டுக் கூற்றும் திருச்சாய்க்காடு காவிரிப் பூம்பட்டினத்துள் அடங்கிய பகுதியே என்று தெரிவிப்பதால் மணிமேகலையின் காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கடல்கோள் காவிரிப்பூம்பட்டினத்தை முழுமையாக அழித்து விடவில்லையென்பதும், காவிரிப்பூம் பட்டினத்தின் பெரும்பகுதி இன்றுள்ள சாய்க்காடு, பல்லவனீச்சுரம் போன்ற பகுதிகளில்தான் இருந்திருக்கவேண்டும் என்பதும் புலனாகிறது.

## 13-ஆம் நூற்றாண்டில் புகாருக்கு வந்த தொல்லை

கடல்கோளால் அழிவுற்றது போக எஞ்சி நின்ற காவிரிப்பூம்பட்டினத்துக்குக் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலும் ஒரு பெருங்கேடு ஏற்பட்டது. பிற்காலச் சோழர்களின் ஆதிக்கத்தால் பின்னடைந்து போயிருந்த பாண்டிய குலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக் கட்டிலேறியது முதல், திரும்பவும் தனது கீர்த்தியை நிலை நாட்டத் தொடங்கியது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்து அப்பொழுது சோழ நாட்டை ஆண்டு வந்த மூன்றாம் இராசராசனைத் தோற்றோடும்படிச் செய்தான். பின்னர் சோழ நாட்டின் சிறந்த நகரங்களைத் தரைமட்டமாக்கியும் விளைபொருள்களை அழித்தொழித்தும் சிறுமைபடுத்தினான். அவனால் அழிக்கப்படாமல் விடப்பட்

டது ஒரே ஒரு மண்டபம்தான் என்றும் அது பட்டினப் பாலை இயற்றிய உருத்திரங்கண்ணனார் என்ற புலவருக்குத் திருமாவளவன் பரிசிலாக வழங்கியது என்றும் திருச்சி மாவட்டத்தில் திருவெள்ளறையிலிருக்கும் கல்வெட்டு,

வெறியர் தளவத் தொடைச் செய் மாறன் வெகுண்ட
தொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டிலரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன் செய் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறுமே யங்கு நின்றனவே,

என்று குறிக்கிறது. இந்தப் பதினாறு கால் மண்டபம் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்திருக்கலாம். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த மற்ற கட்டடங்கள் அழிந்து போக, பதினாறு கால் மண்டபம் ஒன்று மட்டும் அழியாது தப்பி நின்றது என்பது இதனால் ஊகிக்க முடிகிறது. இவ்வாறெனில் கடல்கோளுக்குப் பின் எஞ்சி நின்ற பெரும் பகுதியும் மாறவர்மனின் படையெடுப்பால் அழிபாடுற்றது என்பது விளக்கமாகிறது.

சாய்க்காட்டுள் அடங்கிய புகார்

அவ்வாறு அழிந்துபோய்விட்ட காரணத்தால், விஜயநகர மன்னர்கள் காலத்தில் சாய்க்காட்டுக்குள் அடங்கிய ஒரு சிறு பதியாகக் காவிரிப்பூப்பட்டினம் ஆகவிட்டது என்பதை 'சாய்க்காட்டுச் சீர்மை காவிரிப் பூம்பட்டினம்' என்று பல்லவனீச்சுரம் கல்வெட்டு கூறுகிறது.

## புகாரின் அதிகாரி

விஜயநகர மன்னர்கள் காலத்தில் ஒரு சிற்றூராக ஆகிவிட்ட காவிரிப்பூம்பட்டினம், தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் காலத்தில் சுப்பா அய்யாவய்யன் என்பவரைத் தன்னிடமிருந்து அனுப்பி அரசில் பெரும் பதவி வகிக்கச் செய்திருக்கிறது என்பதைச் செம்பனார் கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது.

## புகார் மக்களின் நாணயம்

திருக்கடையூரில் காணப்படும் ஒரு கல்வெட்டு காவிரிப்பூம்பட்டினத்து மக்கள்பால் தமிழகத்தின் பிற பகுதியிலிருந்த மக்களுக்கு இருந்த நன்னம்பிக்கையைப் பறை சாற்றுகிறது. திருக்கடையூர்க் கோயிலிலுள்ள அணிகலன்களையும் பாத்திரங்களையும் பாதுகாக்க மன்னன் காவிரிப்பூம்பட்டினத்து மக்களைப் பொறுப்பாக ஆக்கிப் பாதுகாத்து வரும்படி செய்தான் என்று அக்கல்வெட்டு கூறுகிறது. இதிலிருந்து 'கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது' வாழ்ந்து வந்த மாசாத்துவான், மாநாய்கன் வணிக பரம்பரை கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு வரையிலும் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்து மற்றப் பகுதிகளின் மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படை.

# புகாரும் அயல் நாட்டுத் தொடர்பும்

அ. அப்துல் மஜீத்

சங்க கால சோழ அரசர்களுள் தலையாய மன்னனாக விளங்கிய கரிகாலன் காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் விரிவாக்கிய துறைமுகப் பட்டினமே காவிரிப் பூம்பட்டினமாகும். இப்பட்டினத்தைப் பற்றியக் குறிப்புகள் சங்க கால நூற்களிலும், அயல் நாட்டுப் பயணிகளின் குறிப்புகளிலும், கல்வெட்டுகளிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இத்துறைமுகப் பட்டினம் பண்டைய தமிழர்களின் வணிகத்தை வளர்த்த மிகச் சிறந்த இடமாகும். இது அயல் நாட்டினருடன் தமிழக மக்கள் தொடர்பு கொள்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைந்திருந்தது. தமிழர்களுடைய வாணிபம் மேற்கே கிரீஸ், ரோம், எகிப்து, பாலஸ்தீனம், மெசப்பொடோமியா, பாபிலோனியா முதலிய, இடங்களில் நடைபெறுவதற்கு முக்கிய காரணமாயிருந்த துறைமுகப் பட்டினங்களுள் முசிரி, தொண்டி முதலியவற்றைக் காட்டிலும் காவிரிப்பூம்பட்டினம் மிகவும் சிறப்பானதாகும்.

காவிரிப்பூம்பட்டினம் அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில்

'புகார்' என்று அழைக்கப்படுகிறது. இப்புகார் நகரம் பட்டினப்பாலையில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்புகார் துறைமுகத்தில் பெரிய மரக்கலங்கள் வந்து சென்றதாகவும், அவைகள் வரும்பொழுது போருக்குப் பயன்படும் குதிரைகளையும், மிளகுப் பொதிகளையும், மேருவிலே பிறந்த மாணிக்க மணியையும், சாம்பூநதம் என்னும் பொன்னையும், குடகுமலையிலிருந்து சந்தனத்தையும், அகில் மரத்தையும், தென் கடலிலிருந்து முத்தையும், கீழ்த்திசைக் கடலிலிருந்து பவளத்தையும், கங்கையாற்றங்கரையில் உண்டான பொருள்களையும், காவிரி ஆற்றங்கரையில் உண்டான பொருள்களையும், ஈழம், கடாரம் முதலிய இடங்களிலுள்ள பொருள்களையும் கொண்டு வந்ததாகப் பட்டினப்பாலை பகர்கின்றது. (பட்டினப்பாலை. வரி 185-93). மேற்கூறியவற்றிலிருந்து சங்க காலத்திலேயே புகார் நகரம் கீழ்த்திசை நாடுகளிலும், மேற்றிசை நாடுகளிலும் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை நன்கு அறிகின்றோம். வணிகத்தின் பொருட்டு பல மொழிகளைப் பேசும் பிற நாட்டு வணிகர்கள் பலரும் புகார் நகருக்கு வந்து அங்கு வாழும் மக்களுடன் தொடர்பு கொண்டு இனிது மகிழ்வதற்கு ஏற்ற இடமாகப் பூம்புகார் விளங்கிற்று என்று பட்டினப்பாலையால் அறிகிறோம் (பட்டினப்பாலை 216-18).

உரோமாபுரி மக்கள் புகார் நகரத்துடன் வாணிகத் தொடர்பு கொண்டு புகார் நகரிலேயே தங்கியிருந்ததாக ஏராளமான குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. யவனர்கள் தமிழக மன்னர்களின் அரண்மனைகளில் கைவினைக்கம்மியராகவும், காவல்

மக்களாகவும் பணிபுரிந்தனர். புறநானூற்றுச் செய்யுள் ஒன்று யவனரைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> யவனர் நன்கலந் தந்த தண் கமழ் தேறல் பொன் செய்
> புனைகலத்தேந்தி நாளும் ஒண்டொடி மகளிர் மடுப்ப ..'

இதிலிருந்து யவனர்கள் தமிழகத்திற்கு நல்ல குப்பிகளில் நறுமணம் கமழும் குளிர்ந்த மதுவைக் கொண்டுவந்தனர் என்று அறிகிறோம். சோழமண்டலக் கடற்கரையில் அகழ்வாய்வின் மூலம் மதுச்சாடிகள் அரிக்கமேட்டிலும், வசவசமுத்திரத்திலும் கண்டெடுத்தது மேற்கூறிய இலக்கியச் சான்றை மெய்ப்பிக்கின்றது. மேலும் காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்ற அகழ்வாய்வின் மூலம் படகு கட்டும் துறையும், ரோமானியப் பானை ஓட்டின் இனத்தைச் சேர்ந்த ரௌலடட் இனப்பானை ஓடுகளும் கண்டு பிடித்ததைக் கொண்டு காவிரிப்பூம் பட்டினம் சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கிய தென்றும் ரோம் நாட்டு மக்களின் தொடர்பு கொண்டிருந்ததென்றும் தெள்ளத் தெளிவாக அறிகிறோம்.

இக்காவிரிப்பூம்பட்டினம் பார்ஹுத் என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டால் 'காகந்தி' என்ற மற்றொருப் பெயரைப் பூண்டிருந்ததாகவும் அறிகிறோம். தாலமி என்னும் பயணி (கி. பி. 130) தம் நூலில் இக்காவிரிப்பூம்பட்டினத்தை 'கபேரிஸ்' என்று குறிக்கிறார். பெரிப்ளஸ் என்னும் நூல் இவ்விடத்தை 'கமரா' என்றும் குறிக்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்திற்கு 'சம்பா' என்னும் மற்றொரு பெயரும் இருந்ததாகத் தெரிய வருகிறது.

இக்காலத்திய கீழ்த்திசை நாடாகிய அன்னம் (Annam) 'சம்பா' என்னும் தொன்மைச் சிறப்பு வாய்ந்த பெயரைக் கொண்டுள்ளது குறிக்கத் தக்கது. இவ்வாறு பெயர் வைத்துக் கொள்வதற்கு வாணிகத் தொடர்புதான் காரணம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். சில சீன வரலாற்றாசிரியர்கள் சம்பா கி. பி. 137 இல் நிறுவப் பெற்றது எனக் கூறுகின்றனர். மேலும் 'சம்பாவில்' உள்ள 'வோ-சங்' என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டின் வரிவடிவங்கள் தென் இந்திய எழுத்துக்களின் வரிவடிவங்களை ஒத்து உள்ளன.

காவிரிப்பூம்பட்டினம் கீழ்த்திசை நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டு இருந்ததை அறிவதற்கு சயாமில் தக்குவா-பா என்ற இடத்தில் கண்டுபிடிக் கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு மிகவும் துணைபுரிகிறது. இக்கல்வெட்டு மணிக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு வணிகக்குழுவையும், திருமால் கோயிலையும், அவனி நாரணம் என்ற குளத்தையும் குறிக்கிறது. திரு. கே. ஏ நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் இக்கல் வெட்டு மூன்றாம் நந்திவர்மன் காலத்தைச் சார்ந்த தென்றும், அவன் 'அவனி நாரணன்' என்ற பட்டப் பெயரைப் பூண்டிருந்தான் என்றும் கூறுகிறார். இக் கல்வெட்டு நாங்கூர் என்ற ஊரையும் குறிக்கிறது. இவ்வூர் காவிரிப்பூம்பட்டினத்தின் அருகாமையில் அமைந்துள்ளது. சோழ அரசன் கரிகாலன் நாங்கூர் வேளிர் குலப்பெண்ணை மணந்தான் என்று அறி வோம். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கீழை நாடு களுக்குச் சென்ற வணிகக் குழுவினர் நாங்கூரிலிருந்து

வீரர்களை உடனழைத்துச் சென்றனர். காவிரிப்பூம் பட்டினத்தின் அருகில் மணிக்கிராமம் என்று ஊர் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மூன்றும் நந்தி வர்மன் காலத்தில் இக்காவிரிப்பூம்பட்டினம் வளங் கொழித்து இருந்தது. மேலும், இம்மன்னன் திறமை மிக்க கடற்படையைக் கொண்டும் விளங்கினான். மேற் கூறிய கல்வெட்டு தக்குவா-பாவையும் காவிரிப்பூம் பட்டினத்தையும் வணிகத் தொடர்பின் மூலம் இணைப் பதற்கு ஒரு மிகச் சிறந்த சான்றாக விளங்குகிறது.

மேற்கூறியவற்றால் காவிரிப்பூம்பட்டினம் மேற்குத் திசை நாடுகளிலும், கீழ்த்திசை நாடுகளிலும், உள் நாட்டிலும் வணிகத்தின் மூலம் தொடர்பு கொண்டி ருந்ததைத் தெளிவாக அறியமுடிகிறது.

# சமய நூல்களில் பூம்புகார்

ச. ஹரிஹரன்

நுதன் விழிநாட்டத்திறையோன் முதலாப் பதி வாழ் சதுக்க பூதம் ஈறாக, எல்லாக் கடவுளர் கோயி லும் இருந்த பூம்புகார் நகரில் பல்வேறு சமயத்தா ரும் வாழ்க்கை நடத்தினர். பௌத்த, சமண சமயத் தைச் சார்ந்தோரும், இந்து மதத்தின் இருபெரும் உட் பிரிவுகளான சைவ, வைணவப் பெரியோர் வழிவந் தோரும் ஒருங்கே வாழ்ந்த தலம். ஆதலின் சமயச் சார்புடைய நூல்களில் புகார் நகர் பற்றியும், அந்நக ரில் எழுந்தருளியுள்ள தத்தமது சமயக் கோயில்கள் பற்றியும், மக்களது சமயவாழ்க்கை பற்றியும் குறிப்பு கள் உள்ளன.

பௌத்த சமய நூல்களான அபிதம்மாவதாரம், புத்தவம்சாத்தகதா முதலிய பிராகிருத நூல்களின் ஆசிரியரான புத்ததத்தர் தமது மற்றொரு பிராகிருத நூலான வினயவினிச்சயத்தில் சோழ நாடு களப் பிரர்கள் ஆட்சியில் அடங்கியிருந்ததைக் குறிக்கிறார்.

அச்சுத் அச்சுத விக்கந்தே
களப்ர குல நந்தனே !

மஹீம் சமனுசாசந்தே

ஆரத்தோ ச சமாபிதோ ||

சோழ நாட்டை அப்பொழுது ஆண்டுவந்த களப்பிர அரசன் அச்சுதவிக்ராந்தன் பௌத்த சமயத்திற்குப் பெரும் ஆதரவு அளித்தான் என்பது தெரிய வருகிறது. பூம்புகாரில் கி.பி. 4-ஆம் நூற்றுண்டில் புத்த விகாரம் ஒன்று எழுப்பப்பட்டதாக பிராகிருத நூல்களிலிருந்து அறிகிறேம். மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினர் மேற்கொண்ட அகழ்வாய்வின் போது புத்தவிகாரம் இருந்ததற்கான தொன்மைச் சான்றுகளும், புத்தபாதமும் கிடைத்துள்ளன.

அபிதம்மாவதாரத்திலும், புத்தவம்சாத்தகதாவிலும் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய ஒரே மாதிரியான குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் கி.பி. 400 வரை உரோமானியர்களுடன் நிகழ்த்திய வாணிபச் செழிப்பைப் பற்றியும் அறிகிறேம்,

நாநா ரத்ன சம்பன்னே

விவிதாபண சங்கதே |

காவேரிப்பட்டணே ரம்மே

நாநாராமோப சோபிதே ||

கைலாச சிகராகார பாசாத பதிமண்டிதே ||

காவிரிப்பட்டண நகரம் உயர்குல மக்களால் நிரம்பியது. எல்லா வகையிலும் முழுமையும் அழகும் ஒருங்கே அமையப்பெற்றது. பற்பல பொருள்களை வாணிபம் செய்வதற்குப் பல்வேறு அங்காடிகள் திகழ்ந்த நகரமது. விலை மதிக்க முடியாத நவரத்தி

னங்கள் நிறம்ப கிடைத்தன. விண்ணைமுட்டும் வகையில் பல மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் அங்கு இருந்தன.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் ஒரு குறிப்பிட்ட சமயச்சார்புடைய காப்பிய இலக்கியம் என்று கூறிவிடல் முடியாது. வணிகக் குலத்தில் தோன்றிய கோவலன் கண்ணகியார் இன்ன சமயத்தைச் சார்ந்தவர் என்று தெரியவில்லை. சமணத்துறவி கவுந்தியடிகள் அவ்விருவர் வழித்துணையாகின்றார். வைணவ மாதரி அவ்விருவரை விருந்தோம்புகின்றாள். சைவச் செங்குட்டுவன் தெய்வக்கல் எடுக்கின்றான். எல்லாச் சமயத்தையும் ஒருங்கு நோக்கும் இளங்கோவடிகள் அவ்விருவரையும் பாடுகின்றார். மேலும் கோவலன் கண்ணகியார் திருமால்கோட்டம், இந்திரவிகாரம், சாரணர் சிலாதலம் ஆகியவற்றைத் தரிசித்ததாக அறிகிறோம். இத்தகைய சிலப்பதிகாரத்தில் புகார் மக்களின் வாழ்க்கை மேன்மை பற்றியும், ஆங்கு சிறப்புற நிகழ்ந்த இந்திர விழா பற்றியும் வரும் வரிகள் குறிப்பிடத்தக்கவை.

ஆயின் மணிமேகலை பௌத்த சமயச்சார்புடைய இலக்கியம். தமிழ் மொழிக்கண் முதலில் தோன்றிய சமயக் காப்பியமாகவும் கொள்ளலாம். அந்நூலில் சமணர்க்கும் பௌத்தர்க்கும் உள்ள வேறுபாட்டை, சுதமதியின் வாயிலாக அவள் சமணப் பள்ளியைக் கைவிட்டு பௌத்தம் சேர்ந்த நிகழ்ச்சி மூலம் தெரிய வருகிறது. தன் தந்தை பசு முட்டிக் குடல் வெளி வந்து கலங்கியபோது சமணர்கள் இரக்கமின்றி இருந்

தனர் என்றும், புத்தமுனிவன் சங்கதருமன் அன்போடு அணைத்து ஆதரவு அளித்தான் என்றும் அதனால் சமண் நீங்கிப் பௌத்தம் சேர்ந்ததாக அவள் காரணம் காட்டு கிறாள். மற்றும் அளவை, சைவம், சாங்கியம், வைசேடி கம், பூதம் முதலிய நெறிகளின் கோட்பாடுகள் இடம் பெறுவதால் அப்பல்திறத்தோரும் வாழ்ந்தார் என் பது திண்ணம்.

சைவ சமயக் குரவர்களான அப்பரும், சம்பந்தரும் புகார் நகரத்து எழுந்தருளியுள்ள இறைவனைத் தங்கள் பதிகங்களில் பெருமைப் படுத்தியுள்ளனர். திருஞான சம்பந்தர் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத் தைப் பதிகங்களில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'சுழியிலாருங் கடலிலோ தந்தெண்டிரை மொண் [டெறியப்
பழியிலார்கள் பயில் புகாரிற் பல்லவனீச்சரமே'

'காரரக்குங் கடல்கிளர்ந்த காலமெலாமுணரப்
பாரரக்கம் பயில் புகாரிற் பல்லவனீச்சரமே'

'வங்கமாரு முத்தமிப்பிவார் கடலூடலைப்பப்
பங்கமில்லார் பயில் புகாரிற் பல்லவனீச்சரமே'

'பட்டினத்துப் பல்லவனீச்சரம்' என்றும் 'பட்டினத் துறைப் பல்லவனீச்சரம்' என்றும் இவ்வூர் அழைக்கப் பட்டது.

புகாரில் அமைந்துள்ள திருச்சாய்க்காட்டைப் பற்றி சம்பந்தர் பின்வரும் வரிகளில் விவரிக்கிறார்.

'வாய்த்த மாளிகை சூழ் தருவண்புகார்மாடே
பூத்தவாவிகள் சூழ்ந்து பொலிந்த சாய்க்காடே'

'..................................பூம்புகார்ச்
சாய்க்காடே பதியாகவுடையான்...........'

'மொட்டலர்த்த தடந்தாழை முருகுயிர்க்குங்
காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காட்டாரெம்
பரமேட்டிபாதமே'

திருச்சாய்க்காட்டுறை இறைவனை அப்பர்பிரான் தன்னுடைய பதிகத்தில் குறித்துள்ளார்.

மத்த யானையின் கோடும்
வண்பீலியும் வாரித்
தத்துநீர் பொன்னி
சாகரமேவு சாய்க்காடு

என்பதால் யானைத்தந்தமும் மயில்பீலியும் இங்கு சிறப்பாகக் கிடைத்தன என அறிகிறோம். இவை பண்டைய காலத்தில் சிறந்த வியாபாரப் பொருள்களாகத் திகழ்ந்தன. அதேபோன்று முத்து, மணி, சங்கு முதலியவையும் இங்கு நிறைந்திருந்தன எனப் பாடுகிறார்

சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர்புராணத்தில் இடம்பெறும் இயற்பகை நாயனார் புராணம் பூம்புகாரில் நிகழ்ந்ததொன்றும். முதற் பாடலில் புகார் நகரம் பற்றிப் பின்வரும் வர்ணனை இடம் பெறுகிறது.

பொன்னி நல்நதி மிக்கநீர் பாய்ந்து
புணரிதன்னையும் புனிதமாக்குவதோர்
நன்னெடும் பெருந்தீர்த்த முன்னுடைய
நலஞ்சிறந்தது வளம்புகார் நகரம்

இயற்பகையார் புகாரில் பெயர் பெற்ற வணிகர்-'அக்குலப்பதிக்குடி முதல் வணிகர்'-செல்வத்து வளமையின் திகழ்ந்த அவ்வன்பரை ஒரு நாள் இறைவன் சோதிக்க எண்ணி வேதியராய் மாயவண்ணம்

கொண்டு, தண்புகார் நகரில் வாழும் அவ்வணிகர் முன் தோன்றி ஓரிரவு அவர் மனையாளை வேண்டி நின்றார். மறையவரின் விருப்பத்திற்கிணங்கிய இயற்பகையார் தன் இல்லக்கிழத்தியை அவர்க்களித்து, வாள் ஏந்தி காவல் நின்றார். இச்செய்தியறிந்த ஏனைய சுற்றத்தார் இயற்பகையைப் பழித்துப் பொருதபோது இயற்பகை அவர்களை வென்றார். தன்னுடைய காவலுடன் மறையவரையும் தன் மனையாளையும் சாய்க்காட்டில் விட்டு மீண்டபோது, இறைவன் அவரைத் திரும்ப அழைத்து விடைமேற் காட்சி அளித்தார். பின்பு ஈசனின் பெருந் திருவடி நிழலில் அவ்விருவரும் அடைக்கலமாயினர்.

திருஞானசம்பந்தர் பூம்புகார் வருகைபுரிந்து அப்பகுதிக் கோயில்களைப் பாடியுள்ளார் என்பதைத் திருத்தொண்டர் புராணம் உறுதி செய்கிறது. திருச்சாய்க்காட்டுப் பெருமான், பல்லவனீச்சரத்துறைபவர் ஆகியோர் பற்றிப் பாடியதாக பின்வரும் வரிகள் கூறுகின்றன.

நிறை புனல் திருச்சாய்க்காடு தொழுதற்கு நினைந்து
[செல்வார்.

பன்னகப் பூணினாரைப் பல்லவனீச்சரத்துச்
சென்னியால் வணங்கி ஏத்தித் திருந்திசைப் பதிகம்பாடிப்
பொன்னி சூழ் புகாரில் நீடு புனிதர் தம் திருச்சாய்க்
[காட்டு
மன்னுசீர்தொண்டர் எல்லாம் மகிழ்ந்தெதிர்கொள்ளப்
[புக்கார்.

அப்பர், சம்பந்தர் இருவரும் புகாரின் அருகமைந்த ஆக்கூர் தலத்திற்கு வருகை புரிந்து அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஈச்சுரரைப் பாடியதைத் திருத்தொண்டர் புராணம் உறுதி செய்கிறது.

தேர் மன்னும் மணி வீதித் திருவாக்கூர் சென்றணைந்தார்.

சார்ந்தார் தம் புகலிடத்தைத் தான்தோன்றி மாடத்துக்
கூர்ந்தார்வம் உறப்பணிந்து கோதில் தமிழ்த்தொடை [புனைந்து
வார்ந்தாடும் சடையார்தம் பதிபலவும் வணங்கியுடன்
சேர்ந்தார்கள் தம்பெருமான் திருவீழிமிழலையினை.

பூம்புகாரில் ஒரு பகுதியாக விளங்கிய நாங்கூர் ஊரைப் பற்றி வைணவப் பெரியாராகிய திருமங்கை ஆழ்வார் தம் பாசுரங்களில் புகழ்ந்துரைக்கிறார். திரு நாங்கூர் மறையோர்கள் வாழ்ந்த தலம். பெரும் செல்வந்தர்கள் தங்களது கொடையால் அணி செய்த நகரம். பல்கலைகள் நன்கு வளர்ந்த பதி அது. திரு நாங்கூர் மணிமாடக் கோயில், வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம் பற்றிய பாசுரங்களில் இவ்வூர் பெருமைப் படுத்தப்பட்டுள்ளது.

முறையால் வளர்க்கின்ற முத்தீயர், நால்வேதர்
ஐவேள்வி, ஆறு அங்கர், ஏழின் இசையோர்
மறையோர் வணங்கப் புகழ் எய்தும் நாங்கூர்
—திருநாங்கூர் மணிமாடக் கோயில்

பிற்காலக் கல்வெட்டுகளில் காவிரிப்பூம்பட்டினம் நாங்கூர் நாட்டின் ஒரு பதியாகத் திகழ்ந்தது. இதனை 'நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம்' என்ற தொடர் உறுதி செய்கிறது.

# புகாரைச் சூழ்ந்த புகழ்மிகு கோயில்கள்

கு. தாமோதரன்

பூம்புகாரைச் சூழ்ந்துள்ள ஆக்கூர், சாயாவனம், திருவெண்காடு, நாங்கூர், பல்லவனீச்சுரம், மேலப் பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் ஆகிய ஊர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

இவ்வூர்களில் எடுப்பிக்கப்பட்டுள்ள கோயில்கள் காண்பவர் உள்ளத்தைக் கவர்கின்ற கலைக்கூடங்களாகக் காட்சியளிக்கின்றன. இங்கு காணப்படுகின்ற சிற்பங் களும் செப்புத்திருமேனிகளும் கலையின் மாண்பினை சித்தரிக்கும் வகையில் சிறந்து விளங்குகின்றன.

## திருவாக்கூர்

மாயவரம் வட்டத்தில் உள்ள இவ்வூர் வரலாற்றுச் சிறப்புடையது. இங்கு எடுப்பிக்கப்பட்டுள்ள திருத்தான் தோன்றீசுவரர் கோயில் ஒரு மாடக்கோயிலாகும். இதற்கு தான்தோன்றி மாடம் என்று பெயர். இறை வ்ன் பெயர் தான்தோன்றியப்பர், இறைவியின் பெயர் வாணெடுங்கண்ணியம்மை. இக்கோயிலிலிருந்து எட்டு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அறுபத்து

மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய சிறப்புலி நாயனுர் இவ்வூரில் பிறந்தவர். இவ்வூரின் சிறப்பை சம்பந்தர்

''வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் றன் [மடந்தை
தோளாகம் பாகமாப் புல்கினன் றெல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் [மிக்கிருக்கும்
தாளாள ராங்கூரிற் றன்றேன்றி மாடமே''

என்று குறிக்கின்ருர்.

திருச்சாய்க்காடு

சீர்காழியிலிருந்து தென்கிழக்கே சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில் காவிரிப்பட்டினத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில், காவிரி கடலோடு புகும் இடத்தில் மிகத் தொன்மையான திருச்சாயாவனேச்சுரர் கோயில் எடுப்பிக்கப்பட்டுள்ள இடமே திருச்சாயாவனம் என்பது. இது திருச்சாய்க்காடு என்று குறிக்கப்படுகிறது. இங்கு பதிஞேரு கல்வெட்டு கள் படியெடுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகள் இவ் வூரை இராசாதிராசவளநாட்டு, நாங்கூர் நாட்டு காவிரிப்பூம்பட்டினத்து திருச்சாய்க்காடு என்று குறிக் கிறது. எழுந்தருளி உள்ள இறைவன் சாயாவனேச்சுரர், இறைவி குயிலினுநன்மொழியம்மை. சாயாவனேச்சுரர் ஒரு சுயம்புலிங்கமாகும். உபமன்யு முனிவர் என்பார் வணங்கிய கோயில். இந்திரன் இக்கோயிலை விண்ணு லகுக்கு எடுத்துச் செல்ல முயன்ருன் என்பர்.

"நீ நாளு நன்னெஞ்சே நினைகண்டாயாரறிவார்
சார்நாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம்
[பெருமாற்கே"

என்ற தேவார அடிகள் மூலம் சம்பந்தப் பெருமானுர் தனது சார்நாளும், வாழ்கின்ற நாளும் சாய்க்காட்டெம் பெருமானுக்குத் தொண்டு செய்வதற்கே என்பதைக் கூறுகிருர்.

இயற்பகை நாயனுர், அவர் மனைவி ஆகியவர்களின் உற்சவ செப்புத் திருமேனிகள் உள்ளன.

திருச்செந்தில் ஆண்டவர் போர்க் கோலம் பூண்ட நிலையில், கையில் வில்லும் அம்பும் ஏந்திய நிலையுள்ள உருவம் மிகவும் சிறப்புடையது. இது கடற்கரைப் பகுதியில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டது. இங்குள்ள மற்ெருரு உருவம் 'சம்பாதி' அம்மனுடையதாகும். இது மணிமேகலையால் வணங்கப்பட்டது.

**கல்வெட்டு குறிக்கும் மன்னர்கள்**

சோழர் : விக்கிரம சோழன், மூன்ரும் குலோத் துங்கன், மூன்ரும் இராஜராஜன்.

பாண்டியன் : மாறவர்மன் சுந்தரபாண்டியன்.

**திருவெண்காடு**

சீர்காழியில் இருந்து தென்கிழக்கே 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கு ஸ்வேதாரண்யேஸ்வரர் கோயில் உள்ளது.

இத்தலத்தை ஆதிசிதம்பரம், சுவேதாரணியம் எனவும் அழைப்பர். எழுந்தருளி உள்ள இறைவனின் பெயர் சுவேதாரணியேச்சுரர், இறைவியின் பெயர் பிரமவித்யா நாயகி. இறைவனுக்கு திருவெண்காடு உடையார், திருவெண்காடு பெருமான், திருவெண்காடு தேவர், திருவெண்காடு உடையநாயனுர் என்னும் வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள காளி, கொற்றவை, அகோரமூர்த்தி ஆகிய சிற்பங்கள் மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றன.

### ஊரின் சிறப்பு

சம்பந்தர் தேவாரம் இவ்வூரைப் புகழ்ந்து கூறுகிறது.

"ஞாழலுஞ் செருந்தியு நறுமலர்ப் புன்னையுந்
தாழை வெண்குருகயல் தயங்கு கானலில்
வேழமதுரித்த வெண்காடு"

"கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடை [யானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் [கொடியானே"

என்று இறைவனின் திருவுருவம் பாடப்படுகிறது.

மெய்கண்டார் பிறந்த ஊர் இதுவே. சமயக்குரவர் நால்வரும் வணங்கிய திருக்கோயில் இது. பட்டினத்தாருக்கு இறைவன் இலிங்கத்தை அளித்த இடம்.

மொத்தம் 100 கல்வெட்டுகள் இக்கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்டுள்ளன. சோழர், பாண்டியர், விஜய நகர், மராட்டியர் ஆகிய மன்னர்கள் காலத்தைச் சார்ந்தவை இவை.

**சோழர் :** முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், வீர ராஜேந்திரன், முதலாம் குலோத் துங்கன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன்.

**பாண்டியர் :** சடாவர்மன் ஸ்ரீவல்லப தேவன், குலசேகரன், சுந்தரபாண்டியன்.

**விஜயநகர் :** விருப்பண்ண உடையார், கிருஷ்ண தேவராயர்.

**மராட்டியர் :** துக்கோஜி மகாராஜா.

**திருநாங்கூர்**

சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ள இவ்வூர் ஒரு நாட்டுக்கே தலை நகரமாக விளங்கியிருக்கிறது என் பதை நாங்கூர் நாடு என்று கல்வெட்டுகள் குறிக்கின் றன. திருமங்கை மன்னன், நாங்கூரில் எழுந்தருளிய யுள்ள இறைவனைப் பாடுகையில்

" முறையால் வளர்க்கின்ற மூத்தீயர் நால்வேதர்
ஐவேள்வி ஆறு அங்கர் ஏழின் இசையோர்
மறையோர் வணங்கப் புகழ் எய்தும் நாங்கூர் "

என்று போற்றுகின்றார்.

இங்கு பெருமாளுக்கு ஒரு கோயில் எடுப்பிக்கப் பட்டுள்ளது. இது நாராயணப் பெருமாள் கோயில்

என்று அழைக்கப்படுகிறது. இதைத் திருமங்கையாழ்வார்,

..............................'' எத்திசையும்
கந்தாரம் அம்தேன் இசைபாட, மாடே
களி வண்டு மிழற்ற, நிழல் துதைந்து
மந்தாரம் நின்று மணம் மல்கும் நாங்கூர்
மணிமாடக் கோயில் ''

என்று குறிக்கின்றார்.

சோழ மன்னன் பரகேசரிவர்மனின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இங்கு எழுந்தருளியுள்ள இறைவனை 'திருமணி மாடக்கோயில் பெருமாள்' என்று குறிக்கிறது. கோயிலுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டது. இங்கு இரண்டு கல்வெட்டுகள் உள்ளன.

## திருப்பல்லவனீச்சுரம்

சீர்காழியிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் பல்லவனீச்சுரம் என்ற புகழ்பெற்ற ஊர் உள்ளது. இங்கு அமைந்துள்ள கோயில் மிகவும் அழகு வாய்ந்தது. இது பல்லவ மன்னன் வணங்கிய கோயில். எழுந்தருளி உள்ள இறைவனின் பெயர் பல்லவனீச்சுரர், இறைவி சௌந்தரநாயகி, கோஷாம்பிகை என்பது. இயற்பகை நாயனாரும், பட்டினத்துப் பிள்ளையாரும் திருவவதாரஞ் செய்தருளிய இடம். சிலப்பதிகாரச் செம்மல்களான கோவலன், கண்ணகி பிறந்த இடமும் இதுவே. இவ்வூரின் சிறப்பினைச் சம்பந்தர்,

''பரசுபாணியர் பாடல் வீணையர் பட்டினத்துறை
[பல்லவனீச்சுரத்

தரசு பேணி நின்றார் இவர் தன்மை யறிவாரார்"

என்று குறிக்கின்றார்.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டொன்று திருச்சாய்க்காட்டூர் சீமையின் காவேரிப் பட்டண மாகாணத்து காவேரிப்பட்டணத்து பல்லவனீச்சுரம் என்று குறிக்கிறது.

## மேலப்பெரும்பள்ளம்

சீர்காழியிலிருந்து தென் கிழக்காய்க் காவிரிப்பூம் பட்டினம் போகும் வழியில் 10 கிலோமீட்டர் சென்று திருவெண்காட்டைச் சேர்ந்து பின்னும் அந்த வழியில் 3 கிலோ மீட்டர் சென்று அங்கிருந்து மேற்கே சென்றால் இத்தலத்தை அடையலாம். திருமால் இத்தலத்திலுள்ள இறைவனை வழிபட்டு சங்கு பெற்ற தலம்.

இக்கோயிலிலுள்ள வட்டணை காட்ட வந்த நாயகர் செப்புத் திருமேனி உலகப் புகழ் பெற்ற ஒன்று.

இத்தலத்தை அப்பர், சம்பந்தர், ஏரண்ட முனிவர் ஆகியோர் வந்து தரிசித்துச் சென்றிருக்கின்றனர். சிவபெருமான் அப்பர் சுவாமிகளைத் தாமே இத்தலத்திற்கு வரவழைத்துத் தரிசனம் தந்ததை 'வாவா வென வுரைத்து மாயம் பேசி வலம்புரமே புக்கங்கே மன்னினாரே' என்றும்; இவ்வூரை 'வயல்புடை சூழ்மாடவீதி வலம்புரவே' என்றும் தேவாரம் குறிக்கும்.

இவ்வூரிலிருந்து மொத்தம் ஒன்பது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. விக்கிரம சோழன் காலத்

திய தமிழ்க் கல்வெட்டொன்று வேலன் கண்டராதித்தர் என்பார் திருவலம்புரமுடையார் கோயிலில் அமைத்துள்ள கூத்தாடுந்தேவர், தடங்கண் நாச்சியார் ஆகிய செப்புத் திருமேனிகட்கு வழிபாட்டுக்கும் நிமந்தங்களுக்குமாக மறச்சேரியில் வாழ்ந்த சிலர் நிலம் விற்றுக் கொடுத்ததைக் குறிக்கிறது.

# புகாரைச் சூழ்ந்த கலைச்செல்வங்கள்

மா. சந்திரமூர்த்தி

பூம்புகாரிலும் அதைச் சூழ்ந்துள்ள திருவெண்காடு, மேலப்பெரும்பள்ளம், மேலையூர், புஞ்சை ஆகிய ஊர்களின் ஆலயங்களில் அழகு வாய்ந்த செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன. அவற்றில் சில வழிபாட்டிலும், சில சென்னை அருங்காட்சி அகத்திலும், தஞ்சை கலைக்கூடத்திலும் வைக்கப்பட்டுள்ளன. அவை யாவும் கவின் மிகுந்து, கலை நிறைந்து காணப்படுவதால் விலைமதிப்பிலாச் செல்வங்களாகத் திகழ்கின்றன.

## மேலையூர்

இப்பகுதியில் கிடைத்துள்ள தொன்மையான செப்புப் படிவங்களில் 'மைத்ரேயர்' உருவம் சிறப்பு உடையதாகும். இது காவிரிப்பூம்பட்டினத்தில் மேலையூர் என்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இன்று சென்னை அருங்காட்சி அகத்தில் உள்ளது. இது செம்பால் செய்யப்பட்டு, அதன் மேல் தங்க முலாம் பூசப்பட்டு விளங்குகிறது. இது புகாரில் வளர்ந்து மறைந்த புத்த சமயத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது. கி.பி. 8-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த பல்லவர் கால கலைப் படைப்பாக விளங்குகிறது.

## திருப்பல்லவனீச்சுரம்

இது பூம்புகார் நகரில் நடுவில் அமைந்துள்ள சிவாலயம். காழி சம்பந்தரால் பாடல் பெற்ற தலம். இங்கு பத்துக்கு மேற்பட்ட செப்புத் திருமேனிகள் உள்ளன.

## சேயுடைச் செல்வி

காவிரிப்பூம்பட்டினத்து திருப்பல்லவனீச்சரத்து கோயிலில் உள்ள 'சேயுடைச் செல்வி' ஆன 'குகாம்பிகை' யின் சிலை சிறந்த படைப்பாகும். அன்னையின் வலது பக்கம் கமலத்தைக் கரத்தில் ஏந்தியவனாய் தாவி தவழும் காலினனாய், கரண்ட மகுடத்தை அணிந்தவனாய், மலைமகளின் மைந்தனான குகன் அமர்ந்த நிலையில் காட்சி அளிக்கிறார். இது 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கால படைப்பாகும்.

## ஏறு ஊரும் பெருமான்

இக்கோயிலில் வழிபாட்டில் உள்ள 'ஏறு ஊரும் பெருமான்' ஆன 'விருஷவாகன தேவர்' சிலை ஓர் அற்புத படைப்பாகும். பெருமான் தாமரைப் பீடத்தில் உமா தேவியுடன் நின்ற நிலையில் நான்கு கரங்களோடு காட்சி அளிக்கிறார். அண்ணலின் இடப்பாகத்தே கொங்கன்ன குவிமுலையாள், கொழுப்பணைத்தோட் கொடியிடையாள் பாங்காக நின்று, தன் வலக்கரத்தைக் குமுதத்தைத் தாங்குவது போல் கொண்டு, இடக்கரத்தை லோல ஹஸ்தத்தில் தொங்கவிட்டு நிற்கும் காட்சி வடிக்கப் பட்டுள்ளது.

இப்பூம்புகார் நகரின் வெண்மாட நெடு விதிகளில், சிவனுறையும் ஆலயத்தில் விடையேறும் பெருமானின் கோலத்தைக் கண்ட ஞானசம்பந்தர் பெருமான், 'விடையார் மேவியராய்ச் சீலும் வித்தகர்' எனக்கூறிப் போந்தார். இத்தியானச் செய்யுட்களை வடித்தெடுத்த சோழர் காலக் கலைஞர்கள் அதில் ஆத்மாவின் ராகத்தை ரிணமிக்க வைத்தனர். இச்செப்புத் திருமேனிகள் முதலாம் ஆதித்த சோழர் காலத்தின் (கி.பி. 871-907) கலைப்படைப்புகளாக விளங்குகின்றன.

**சாமாஸ்கந்தர் :**

அம்மையப்பனாய் விளங்கும் 'சோமாஸ்கந்தர்' உருவம் எழில் வாய்ந்ததாகும். இங்கு சங்குவெண் குழைச் செவியன், தண்மதி சூடிய சென்னியன் தம் மேலிருகரங்களில் மானும் மழுவும் தாங்கியோனாக, கீழிருகரங்களில் அபயமும் வரதமும் அளிக்கும் எம்பிரானாக, வலக்காலை கீழே தொங்க விட்டு, இடக்காலை பத்மாசனத்தில் மடக்கி வைத்து அமர்ந்திருக்கிறார். சிவபிரானின் இடப்பாகத்தே தேவி அமர்ந்திருக்கிறாள். இருவருக்கும் நடுவே கந்தன் கமல மலர்களைக் கரங்களில் தாங்கும் பாவனையில், கரண்ட மகுடத்தைச் சென்னியில் அணிந்த நிலையில், சற்றே குஞ்சித்த திருவடிகளுடன் நின்று கொண்டிருக்கிறார். இத்திருமேனி பிற்பட்ட சோழர் காலக் கலைப்பணியாக காணப்படுகிறது.

**ஆடவல்லான் :**

ஆடவல்ல பெருமானின் அழகு செப்புத்திருமேனி ஒன்று இவ்வாலயத்தில் உள்ளது. குழலிசைக்க, வீணை

மீட்ட, மொந்தை கொட்ட, முழவதிர, கழலின் ஓசை ஆர்க்க, இசைக்கேற்ப நடமாடும் பெருமானை, மலை மகள் மணாளனை, விரிசடை நாயகனை, அண்ணல் ஆடிய திருத்தாண்டவத்தைத் தோணிப்புறத்து தோன்றல் போற்றி பாடியுள்ள பாடலைப் பிரதிபலிக்கும் வண்ணம் வடிக்கப்பட்டுள்ள செப்புத் திருமேனி சிறப்புடையதாகும். இது பிற்பட்ட சோழர் காலப் பணியாகும்.

### திருச்சாய்க்காடு

காவிரிப்பூம்பட்டினத்து திருச்சாய்க்காட்டு சாயவனேசுவரர் கோயில் புகழ் வாய்ந்ததாகும். இக்கோயிலை அரக்கன் யாகம் நெறித்து அருள் செய்தவன் கோயில் என்றும், ஆறு சூடும் அமரர் பிரான் உறையும் கோயில் என்றும், புரங்கள் மூன்றும் பொடிபட எய்தவன் கோயில் என்றும் தேவாரம் புகழ்ந்து கூறும். இங்கு சாய்க்காடே பதியாக உடையானுக்கும் தேவி குயிலினும்நன்மொழியாளுக்கும் சிற்பங்களும் சிலைகளும் வடிக்கப்பட்டுள்ளன. இவ்வாலயத்தில் உள்ள வீணை ஏந்தும் பெருமானுக்கு வடுக்கப்பட்டுள்ள சிலை ஒப்பற்ற படைப்பாகும்.

### மேலப்பெரும்பள்ளம்

காவிரிப்பூம்பட்டினத்தின் அருகில் மேலப்பெரும் பள்ளம் என்ற திருவலம்புரம் சிவாலயத்தில் சில அழகிய செப்புத் திருமேனிகள் உள்ளன.

### வட்டணை காட்ட வந்த நாயகர்

இது சிறப்பு வாய்ந்த திருமேனியாகும். சுமார் ஒரு மீட்டருக்கு மேல் உயரமுள்ள வட்டணை காட்ட

வந்த நாயகரின் திருவுருவம் நீண்ட சடைமுடியும், கையிலே தாங்கிய வீணையும், இடக்கரத்திலே தாங்கிய சூலமும், வலக்கரம் துள்ளிக் குதிக்கும் மானுக்குத் துளிர் கொடுக்கும் கரமாகவும் அமைந்துள்ளது. பண்ணில் யாழியர் என்றும் பாடல் வீணையர் என்றும் புகழப்படும் எம்பிரான் காலில் காலணி அணிந்து, வீணையின் நாதத்தில் இணைந்து, வெண்மாட வீதிகளில் பிச்சை புகும் பெருமானைக, வட்டணை காட்ட வந்த நாயகராக, குள்ளச் சிறுபூதம் தட்டைத் தலையிலே தாங்கிவர எழில் வாய்ந்த திருவுருவாய் எழுந்தருளியுள்ளார்.

இவ்வூர்ப் பெருமானை அப்பர் பிரான் மிகவும் அழகாகப் பாடுகின்றார்.

" பட்டுடுத்துப் பவளம் போல் மேனி யெல்லாம் பசுஞ்
 சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க் கெவ்வூரீர்
 எம்பெருமான்................. "

இரண்டாம் இராஜாதிராஜனின் கல்வெட்டில் இத்திருமேனி 'வட்டணை காட்ட வந்த நாயகர்' எனக் குறிக்கப்படுகிறது.

## வேடனும், தேவியும்

சிவன் கோயிலில், பத்ர பீடத்தின் மீதுள்ள பத்மாசனத்தில், வேடன் உருவில் இரு கரங்கள் கொண்ட சிவபிரானின் திருமேனி நிற்கும் நிலையில் உள்ளது. குறுந்தாடி, முறுக்கிவிடப்பட்ட மீசை, காதுகளில்

ஓலைக்குழைகள், உடலில் சன்ன வீரம் ஆகியவை த் திருமேனியை அழகு செய்கின்றன. இத்திருமேனியின் இடது கரம் வில்லைத் தாங்கும் வகையிலும், வலது கரம் அம்பை ஏந்திய நிலையிலும் அமைந்துள்ளன. பாதக் குற்டு அணிந்துள்ள இத்திருமேனி, சிவபிரான் வேடனாக வந்து பார்த்தனுக்குப் பாசுபதம் அளித்ததைக் குறிக்கிறது.

வேடன் அருகில் இரு கரங்கள் கொண்ட தேவி பத்மாசனத்தில் நின்று கொண்டிருக்கிறாள். இத்திருமேனிகள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

இங்குள்ள தொன்மையான கல்வெட்டுகள் விக்கிரம சோழன் (கி.பி. 1118-1130) காலத்தைச் சார்ந்தவை. இவ்வூர் கற்றளி விக்கிரமசோழன் காலத்தில் திருவலம்புரம் நம்பி என்ற கழுமலமுடையான் ஆளுடையான் பிள்ளையார் சிவம் என்பானால் எடுக்கப் பெற்றது.

## ஆடவல்லான்

இவ்வூர் கல்வெட்டு விக்கிரமசோழன் காலத்தில் ஆலங்குடி வேளான் கண்டராதித்தன் என்பான் இக்கோயிலில் கூத்தாடும் தேவருக்கும், திருப்பள்ளியறை பிராட்டியாருக்கும் சிலை எடுத்தான் என அறிவிக்கிறது. எனவே இவ்வாலய வழிபாட்டில் உள்ள கூத்தாடும் தேவர் ஆன நடராஜப் பெருமானும், தேவியும் ஆலங்குடி கண்டராதித்தனால் செய்தளிக்கப்பட்டவை என அறியலாம்

கண்டராதித்தனால் செய்தளிக்கப்பட்ட இவ்வழகிய சிலை, நடமாடும் நாயகனாக, மேலிருகரங்களும் உடுக்கையும், அனலும் ஏந்திய அண்ணலாக, கீழிரு கரங்களும் அபயமும் வீசியாடும் கரமுமாக தாண்டவ கோலத்தில் காட்சி அளிக்கிறது.

## நனிப்பள்ளி

இவ்வூர் பூம்புகாரின் மேற்கே ஆறு கல் தொலைவில் புஞ்சை என்னும் பெயரில் அமைந்துள்ளது. இந் நனிப்பள்ளி அப்பராலும், சம்பந்தராலும் பாடல் பெற்ற தலம். அடியார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி பாலையாய் இருந்த இத்தலத்தைச் சம்பந்தர் நெய்தலாகப் பாடினார். ஜெயங்கொண்ட சோழ வள நாட்டு ஆக்கூர் நாட்டு பிரம்மதேயமான நனிப்பள்ளி சிவாலயத்தில் சிறந்த சிற்பங்களும், செப்புத்திரு மேனிகளும் உள்ளன.

இக்கோயில் இரண்டாம் ஆதித்த சோழர் காலப் பணியாகும். தேவகோட்டங்களில் 'அடிமுடி காணா அண்ணல், அகத்தியர், ஆலமர்ச் செல்வன், நான்முகன், விநாயகர், கொற்றவை ஆகியோரின் சிற்பங்கள் சோழர் கால அமைதியில் அமைந்துள்ளன. அதிட்டானங்களில் இராமாயணக் காட்சியைச் சித்தரிக்கும் தொடர் சிற்ப வரிசைகள் உள்ளன இவ்வாலயத்தில் வழிபாட்டில் உள்ள ஆடவல்லானும் தேவியும் சிறப்புடையதாக விளங்குகிறது. விருஷவாகன தேவருக்குச் செப்புச் சிலைகள் இருந்ததை இவ்வூர் கல்வெட்டுகள் குறிக்கின்றன. அது இன்று காணப்படவில்லை.

சோழர் காலக் கலைப்பணியின் சிறந்த படைப்புகளை இவ்வாலயத்தில் காணலாம்.

திருவெண்காடு

பூம்புகாருக்கு வடமேற்கே இரண்டு கல் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் மூன்று முறை செப்புத்திருமேனிகள் கண்டெடுக்கப் பெற்றன. முதன் முறை எடுக்கப்பெற்றது தஞ்சை கலைக் கூடத்திலும், இரண்டாம் முறை எடுக்கப்பெற்றது சென்னை அருங்காட்சி அகத்திலும், சில ஆலயத்திலும், மூன்றும் முறை எடுக்கப்பெற்றது தஞ்சை கலைக் கூடத்திலும் உள்ளன. அவையாவன ஆடும் அரவத்தை முடிதரித்த ஏறு ஊரும் பெருமான், வெண்காட்டு உறையும் பெண்காட்டும் உருவான், மலையாள் மடந்தை கைப்பிடித்த மணவாளன், பிச்சை உகக்கும் பெருமான், சண்டேசன், கரிய கஞ்சுகன், கனஷ் காட்டும் கையான். கண்ணப்பன் முதலியனவாகும்.

இச்செப்புத் திருமேனிகளில் பெண்காட்டும் உருவான் ஆன அர்த்தநாரியும், ஏறு ஊரும் பெருமான் ஆன விருஷவாகன தேவரும், பிச்சை உகக்கும் பெருமான் ஆன பிட்சாடனரும், கண்ணப்பரும் எழில் வாய்ந்தவையாகும். இச்சிலைகளைச் செய்தளித்தவர்களையும் இக்கோயில் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

அமலன் செய்யவாயார் என்பார் பிச்சை தேவரையும், கோலக்காவன் என்பார் விருஷவாகனரையும் துப்பயன் உத்தமசோழி என்பவர் அர்த்தநாரிதேவரையும் செய்தளித்ததாக கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக்

கலைச் சின்னங்களின் காலத்தைக் கணிக்கும் கல்வெட்டு கள் ஒப்பற்ற சான்றுகளாக விளங்குகின்றன. இவை அனைத்தும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவையாவும் இராஜராஜன், அவன் மகன் இராஜேந்திரன், அவன் மகன் இராஜாதிராஜன் ஆகிய மன்னர்களின் காலத்தில் செய்தளிக்கப்பட்டவை.

**கண்ணப்பர்**

கானத்தலைவன் கண்ணப்பன் தாடியும் மீசையும் கொண்டு, தோலுடைவுடுத்து வேடனாக, சன்னவீரம் தரித்து, காலணி அணிந்த கானத்தலைவனாக, காளத்தி நாதரின் கண்ணில் குருதி கண்டு கணையும் சிலையும் இழந்தானாக, சோகத்தால் அத்தனுக்கு நேர்ந்தது கண்டு அதரங்கள் துடிக்கும் அடியானாக, வலக்கண்ணைத் தோண்டி வலக்கரத்தில் ஏந்தி காளத்தி அளிக்கும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளான். இது,

"செல்வன் திருக்காளத்தியுள் அப்பன்
திருமேனியில் மூன்று கண்ணாய்
ஆங்கொரு கண்ணிலும் உதிரம்
ஒழியா தொழுக இருந்தனனாகப்
பார்த்து நடுக் குற்றுப் பதைந்துமனஞ் சுழன்று
வாய்ப்புனல் சோர மலர்க்கண்நீர் அருவ
.................................................
இத்தனை தரிக்கிலன் இதுதனைக் கண்ட என்
கண்ணினை இடந்து கடவுள்தன் கண்ணுறும்
புண்ணில் அப்பியும் காண்பன் என்றொரு
கண்ணிடைக் கணையது மடுத்துக்
கையில் வாங்கி"—

என்ற அவலச்சுவை மிகுந்த பாடலை வெளிக்காட்டும் செப்புத் திருமேனியாக வடிக்கப்பட்டுள்ளது. இது காண்போர் உள்ளத்தைக் கவரும் ஓர் உன்னத படைப்பாகும்.

**பாவை ஓர் பங்கன்**

வெண்காட்டு உறையும் பெண்காட்டு உருவான் ஆன அர்த்தநாரீஸ்வரர் உலகோர் வியத்தகும் ஒப்பரும் படைப்பாக விளங்குகிறது. உமையோர் பாகமாய் பத்மாசனத்தில் நின்று காட்சி அளிக்கும் பாவை ஓர் பங்கன் சோழர் கால படைப்புகளில் தலை சிறந்து விளங்குகிறது.

"பண்காட்டிப் படியாய தன் பத்தர்க்குக்
கண்காட்டிக் கண்ணில்நின்ற மணியொக்கும்
பெண்காட்டிப் பிறைச்சென்னி வைத்தான்"

என்று நெஞ்சுருகி அப்பர் பிரான் பாடிய பாடலை வெளிக்காட்டும் வகையில் இச்செப்புத் திருமேனி அமைந்துள்ளது. இதைச் செய்தளித்தவன் துப்பாயன் எனக் கல்வெட்டு கூறும்.

# இந்திர விழா

இரா. நாகசாமி

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தில் சீரும் சிறப்புமாக நடத்தப்பட்ட இந்திர விழாவின் நோக்கம் நாட்டு மக்கள் பசி நீங்கி பிணிகள் அற்று, பகை நீங்க வசிப்பதற்கு ஏற்ற நிறை மனைகளும் நிலவளனும் பெற்று சிறக்க வேண்டும் என்பதே. மக்களின் நல்வாழ்வுக்காக எடுக்கப்படும் நல்விழா இந்திர விழா. இதை மணிமேகலை தெளிவாகக் குறிக்கிறது. வள்ளுவன் யானை மீது ஏற்றிய முரசை அறைந்து,

> " பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்க "

என அணி விழா என்றும் விண்ணவர் கோமான் விழா என்றும் சிலப்பதிகாரம் குறிக்கிறது. வேந்தன் என்னும் இந்திரன் மருத நிலத்தின் தெய்வம். "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" என இதைத் தொல்காப்பியம் கூறுகிறது. ஆதலின் நிலவளத்தைக் கொடுக்கும் தெய்வமாக இந்திரன் சங்ககாலத்தில் தமிழ்நாட்டில் போற்றப்பட்டான். அதை உருவகப்படுத்தி இந்திரனுக்கு கோயில் எடுத்து வழிபட்டினர் தமிழர்.

"ஒண்தொடி வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலை"

என்று புறநானூறு குறிக்கிறது. ஆதலின் இந்திரனுக்கு எடுக்கும் விழா நிலவளம் பெருக வேண்டி எடுக்கும் விழா என்பது தெளிவு. இந்திர விழா சங்க காலத்தில் தமிழகத்தில் சிறந்திருந்தது என ஐங்குறுநூறு

"இந்திர விழகாற் பூவின"

எனக் கூறுகிறது.

இவ்விழா சித்திரை மாதத்தில் பௌர்ணமியில் நடத்தப்படும். காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த இந்திர விழா சித்திரை மாதத்தில், பௌர்ணமி அன்று சித்திரை நக்ஷத்திரமும் சேர்ந்திருந்தது என்றும் அன்று அவ்விழா நடந்ததென்றும் சிலப்பதிகாரத்தில்

"சித்திரை சித்திரைத் திங்கள் சேர்ந்தென"

எனக் கூறுகிறது. சித்திரை மாதம் வேனில் காலத் தொடக்கம். ஆதலின் இது வேனில் விழா என்றும் குறிக்கப்படும். வில்லிபுத்தூரார் தன் பாரதத்தில் இவ் விழாவை வேனில் விழா என்று குறித்துள்ளார். இதை வசந்த விழா என வடமொழி நூல்கள் கூறுகின்றன. எங்கும் பசுமை நிறைந்து மணமலர்கள் மலர்ந்து மனதுக்கு இன்பமளிக்கும் இயற்கை சூழ்நிலை வளப்பத்தின் பெருக்கைக் காட்டுகிறது. இயற்கை பூணும் இப்புதுப் பொலிவு மக்கள் மனதில் இன்ப உணர்ச்சிகளை ஊக்குவித்து மகிழச் செய்யும் இயற்கை எழுச்சியாகும். ஆதலின் சிறந்த விழாவாக மக்கள் எடுத்து இன்புற்றனர். மணமலர்களோடு தென்றலும்

இணைவதால் காம இன்பம் பெருகும். ஆதலின் இக்காலத்தே காமன் பண்டிகையும் கொண்டாடுவர். இதையே சிலம்பு

> "மீனேற்றுக் கொடியோன் மெய்பெற வளர்த்த
> வானவல்லி வருதலுமுண்டு கொல்.

எனக் கூறுகிறது.

நீர்வளம் நிறைந்தது சோழ நாடாதலின் சோழர் தலைப்பதியான பூம்புகாரில் இவ்விழா சிறப்பாக நடத்தப் பெற்றது. இவ்விழாவை தூங்கெயில் எறிந்த தொடித் தோட்செம்பியன் என்னும் சோழப் பெருமன்னன் பூம்புகாரில் நடத்தி வைத்தான் என்று மணிமேகலை கூறுகிறது. இவ்விழா ஏழு நாட்கள் நடைபெற்றது என்றும் அச்சோழ மன்னனின் வேண்டுகோளை ஏற்று அமரர் தலைவனே அந்நகரில் இனிது உறைந்தான் என்றும் அந் நூல் கூறுகிறது. அரசே அங்கு கூடி இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது என சமயக் கணக்கரும், அமைச்சர்களும், கடவுளரும், ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும், பல தேச மக்களும், பல பாஷை பேசுவோர்களும் ஒருங்கே கூடி விழா எடுத்தனர். மணிமேகலை குறிப்பதிலிருந்து இது அரசே எடுத்த விழா என்பதும் தெளிவு.

இவ்விழாவில் இந்திரனது வஜ்ஜிராயுதம் நிற்கும் கோயிலிலிருந்து முரசை அலங்கரித்த யானையின் மீது ஏற்றி உலாவாக எடுத்து வந்து இந்திரனது ஐராவத மாகிய வெள்ளை யானை நிற்கும் கோயிலில் விழா முரசை இயம்புவர். இது இந்திரனுக்கு விழாவினை அறிவிப்பதற்கு என்பர். இதை வள்ளுவன்

" திரு விழை மூதூர் வாழ்க,
வானம் மும்மாரி பொழிக, மன்னவன்
கோள் நிலை திரியாக கோடீவான் ஆகுக "

எனக் கூறி முரசறைவான். இதைத் தீவகச் சாந்தி என்று மணிமேகலை கூறுகிறது.

பின்னர் அமரர்தரு நிற்கும் கோயிலில் கொடி ஏற்றுவர். இக்கொடியில் அட்டமங்கலமும், இந்திரனின் யானையும் தீட்டப்பட்டிருக்கும். கொடியேற்றம் ஆனதும் அங்கு குழுமியிருந்த அரச குமாரர்களும், வணிகர்களும், படையினரும் மக்களும் அரசு மேம்பட வேண்டும் என சிறப்பு வழிபாடு செய்வார். காவிரியாற்று நீரைப் பொற்குடத்தில் ஏந்தி வந்து வச்சிராயுதத்தில் இந்திரனை ஆவாஹித்து, நிரவி விழா செய்வர்.

அது சமயம் அந்நகரில் இருந்த பிறவா யாக்கைப் பெரியவனாகிய சிவபிரான் முதல் சதுக்கப் பூதம் வரை உள்ள எல்லாக் கோயில்களிலும் சிறப்பாக விழா எடுக்கப்படும். அறவோர் பள்ளிகளில் அறம் போதிக்கப்படும். மணல் பந்தல்களிலும் பொதியில்களிலும் புண்ணிய நல்லுரை கூறப்படும். பட்டி மண்டபங்கள் நடைபெறும். இவ்வாறு ஏழு நாட்களும் பெரும் விழாவாக நடைபெறும் என அறிகிறோம்.

இக்காலத்தில் அரசன் சிறக்கவேண்டும் என மறக்குடி வீரர் பீடிகையில் தங்களது தலையைத் தாமே அரிந்து பலியாக இடுவார். மறக்குடிப் பெண்கள் அவரை துவரை முதலியவற்றின் புழுக்களையும், பூக்களையும் நிணம் கலந்த சோற்றையும் அவிப்பலி

யாக அளித்து துணங்கைக் கூத்து ஆடுவர் என சிலம்பு கூறுகிறது. இப்பெருவிழாவில் மக்கள் காம இன்பம் விரும்பி துய்ப்பர் என்றும் அறிகிறோம். கரிகால் பெருவளத்தான் முதலிய பெரு மன்னர்கள் இவ் விழாவைச் சிறப்பாக எடுத்துள்ளனர்.

இவ்விழாவிற்கும் நாட்டிய கலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பரத முனிவன் தனது நாட்டிய நன்னூலை இந்திர விழாவில் எடுத்துரைத்தான் என வடமொழி மரபுகள் கூறுகின்றன. சிலப்பதிகாரத்தில் நாட்டியமும் நாடக மடந்தை மாதவியும் பெற்றுள்ள சிறப்பு அனைவரும் அறிந்ததே. மணிமேகலையும் இந்திர விழாவுடன் தொடங்குகிறது. நாட்டியத்தில் முதன்முதல் அரங்கேற்றம் செய்யும் ஆடல் மகளுக்கு தலைக்கோல் அளிப்பது மரபு. இத்தலைக்கோலை இந்திரனின் மகன் சயந்தனுகை உருவகிப்பர் என்று நம் மரபுகள் கூறுகின்றன. மக்களின் மனதுக்கு இன்பம் அளிக்கும் கலைகளில் நாட்டியத்துக்கு ஈடு ஏதுமில்லை என காளிதாச மகாகவி கூறுவான். அந்நாட்டியம் இந்திர விழாவில் சிறந்தது. ஆதலின் இந்திர விழா கலைக்காக எடுக்கப்படும் விழா. கலை உள்ளம் நிறைந்த பண்டைய அரசு எடுத்த விழாவை மீண்டும் தமிழக அரசு தொடங்குவது, தொன்மைக் கலை வளர்ச்சிக்கு புத்துயிர் ஊட்டும். போற்றத்தகும் விழா என்பதை அனைவரும் ஏற்பர். மக்கள் பசி நீங்கி, பிணி நீங்கி, பகை நீங்கி, வசி நிறைந்து வளம் நிறைய பணிபுரியும் அரச விழா அணி விழா சிறக்க.

## தமிழ்நாட்டில் கிடைத்துள்ள உரோமானியக் காசுகள்

1. கோவை மாவாட்டம் .... அகஸ்டஸ் (கி.பி. 14)
2. கோவை மாவட்டம் .... டைபீரியஸ் (கி.பி. 37)
3. கலயம்புத்தூர், மதுரை மாவட்டம் .... அகஸ்டஸ் நெர்வா (கி.பி. 98) 63 தங்கக் காசுகள்
4. கரிவலம்வந்தநல்லூர் .... நெல்லை மாவட்டம் .... ஹேட்ரியன் (கி.பி. 118) 6 காசுகள்
5. கரூர், திருச்சி மாவட்டம் .... அகஸ்டஸ், டைபீரியஸ் (கி.பி. 37 500 காசுகள்
6. கரூர், திருச்சி மாவட்டம் .... கிளாடியஸ் (கி.பி. 54) 5 கா கள்
7. கரூர், திருச்சி மாவட்டம் .... மார்கஸ் அரிலஸ் (கி.பி. 180)
8. கரூர், திருச்சி மாவட்டம் .... அகஸ்டஸ், டைபீரியஸ் (கி.பி 37)
9. கட்டங்கண்ணி, தாராபுரம் வட்டம் .... கோவை மாவட்ட .... அகஸ்டஸ் டைபீரியஸ் (கி.பி. 37)
10. காவிரிப்பூம்பட்டினம், தஞ்சை வட்டம் .... ரோமானியக் காசு
11. குளத்துப்பாளையம், தாராபுரம் வட்டம், கோவை மாவட்டம் .. அகஸ்டஸ், பியோடோசியஸ் (சி.பி. 395)
12. மதுரை மாநகர் .... நீரோ (கி.பி. 46)
13. மதுரை மாநகர் .... கொனேரியஸ் ஆர்க்கேடியஸ்
14. மதுரை வட்டம் .... டொமிட்டன் (கி.பி. 96)
15. மாமல்லபுரம் .... டியோகாடிசியஸ் .... 4-ஆம் நூற்றூண்டு.
16. --மேற்படி--
17. மாம்பலம் .... அகஸ்டஸ் (கி.பி. 14)

18. பெண்ணூர், கோவை மாவட்டம் .... அகஸ்டஸ்

19. பொள்ளாச்சி .... அகஸ்டஸ், டைபீரியஸ்

20. தஞ்சாவூர் .... டியோகிளேடியன் .... (கி.பி. 305)

21. தொண்டைமாநத்தம், கடலூர் வட்டம் .... டைபீரியஸ், நீரோ

22. வெள்ளலூர், கோவை மாவட்டம் .... அகஸ்டஸ் காசுகள், அகஸ்டஸ் கிளாடியஸ் காசுகள்

இவை தவிர புதுச்சேரிக்கு அருகில் அரிக்கமேடு என்ற இடத்திலும், லாறு கடலில் புகுமிடத்தில் வசவசமுத்திரம் என்னுமிடத்திலும் ாமானியப் பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

# புகாரின் வரலாறு

## கண்ணோட்டம்

*சங்ககால முடிவு வரை சோழர் தலைநகர் :*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கி.பி | 4 | முதல் | 5 | நூற்றாண்டு | வரை | களப்பிரர் வசம். |
| ,, | 6 | ,, | 9 | ,, | ,, | பல்லவர் வசம். |
| ,, | 9 | ,, | 13 | ,, | ,, | சோழப் பேரரசின் கீழ். |
| ,, | 13 | ,, | 14 | ,, | ,, | பாண்டியர் வசம் |
| ,, | 15 | ,, | 17 | ,, | ,, | விஜயநகர, நாயக்கர் ஆட்சி. |
| ,, | 18 | ,, | 19 | ,, | ,, | தஞ்சை மராட்டியர் வசம். |
| ,, | 19 | ,, | 20 | ,, | ,, | ஆங்கிலேயர். |
| ,, | 1947 | முதல் | | | | மக்கள் ஆட்சி. |

# பூம்புகார் பற்றிக் கூறும் நூல்கள்

## தமிழ் நூல்கள் :

அகநானூறு
புறநானூறு
பட்டினப்பாலை
பதிற்றுப்பத்து
முத்தொள்ளாயிரம்
சிலப்பதிகாரம்
மணிமேகலை
தேவாரம்
திருத்தொண்டர் புராணம்
நந்திக்கலம்பகம்

## பிராகிருத நூல்கள் :

மிளிந்தபண
ஜாதகக் கதைகள்
அபிதம்மாவதாரம்
புத்த வம்சாத்த கதா

## வெளிநாட்டு நூல்கள் :

பெரிப்ளஸ் மெரிஸ் எரித்ராய்
தாலமி எழுதிய பூமி நூல்
பிளினி எழுதிய நூல்

## கல்வெட்டுக்கள் :

பார்ஹூத் கல்வெட்டு
சாயாவனம் கல்வெட்டுகள்.

## புகார் எனும் பூங்கொடி

புல வரை இறந்த புகார் எனும் பூங்கொடி
பல் மலர் சிறந்த நல் நீர் அகழிப்
புள் ஒலி சிறந்த தெள் அரிச் சிலம்பு அடி,
ஞாயில் இஞ்சி நகை மணி மேகலை,
வாயில் மருங்கு இயன்ற வான் பணைத் தோளி,
தருநிலை, வச்சிரம், என இரு கோட்டம்
எதிர் எதிர் ஓங்கிய கதிர் இள வன முலை,
ஆர்புனை வேந்தற்குப் பேர் அளவு இயற்றி
ஊழி எண்ணி நீடு நின்று ஓங்கிய
ஒரு பெருங் கோயில் திருமுகவாட்டி,
குண திசை மருங்கில் நாள் முதிர் மதியமும்
குட திசை மருங்கில் சென்று வீழ் கதிரும்,
வெள்ளி வெண் தோட்டொடு, பொன் தோடு ஆக,
எள் அறு திருமுகம்—

—மணிமேகலை 5, 109-122.

## காவிரிப்பட்டினம் எனப் பெயர் பெற்றது

செங்கதிர்ச் செல்வன் திருக் குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையின் காந்தமன் வேண்ட;
அமர முனிவன் அகத்தியன்-தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை
செங் குணக்கு ஒழுகி, அச் சம்பாபதி அயல்
பொங்கு நீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற;
ஆங்கு இனிது இருந்த அருந் தவ முதியோள்
ஓங்கு நீர்ப் பாவையை உவந்து எதிர் கொண்டு...
..................................................
என் பெயர்ப் படுத்த இவ் இரும் பெயர் மூதூர்
நின் பெயர்ப் படுத்தேன்; நீ வாழிய; என,
இரு பால் பெயரிய உரு கெழு மூதூர்—

—மணிமேகலை, பதிகம்.

## வட இந்தியக் கல்வெட்டில் பூம்புகார்

வட இந்தியாவில் பார்குத் என்ற இடத்தில், ஒரு பௌத்த ஸ்தூபத்தில் கிடைத்த கல் தூணில், ஒரு கல்வெட்டு உள்ளது. அக்கல்லைக் காகந்தி நகரைச் சேர்ந்த சோமா என்ற பிக்குணி தானமாகக் கொடுத்ததை அக்கல்வெட்டுக் குறிக்கிறது. காகந்தி என்பது பூம்புகாரின் மறு பெயர். அக்கல்வெட்டு கி. மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. கிறித்துவுக்கும் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே, புகார் நகர் சிறப்புற்று இருந்ததற்கு இதுவே சான்று.

"காகந்தியா சோமாய பிச்சுனியா தானம்"

பார்குத் கல்வெட்டுகள்—A. 37. Corpus Inscriptionum Indicarum Vol. II. pt. II.

## பிராகிருத நூல்களில் புகார்

கி.பி. முதல் நூற்றுண்டில் எழுதப்பட்ட மிளிந்தபண என்று நூல் இத்நகரை கோல பட்ணம் (சோழபட்டினம்) என்று குறிக்கிறது.

பௌத்த ஜாதகக் கதையில் தமிழ் நாட்டுக் காவிரிப் பட்டினத்தில் அகித்தி என்பவர் வசித்ததாகக் குறிப்பு உள்ளது.

கி.பி. 4-ஆம் நூற்றுண்டின் இறுதியில் சோழ நாட்டை அச்சுத விக்கிராந்தன் என்ற களப்பிர மன்னன் ஆண்டு வந்தான். அவன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் கணதாசன் என்பவன் பௌத்த துறவிகள் வசிக்க விஹாரம் ஒன்றைக் கட்டினுன். அங்கு புத்ததத்தர் என்ற பெரியார் தங்கியிருந்த போது அபிதம்மாவதாரம், புத்தவம்சாத்தகதா என்று பிராகிருத நூல்களை இயற்றியுள்ளார்.

நாநாரத்ந சம்பன்னே
  விவிதாபண சங்கதே।
காவேரிப்பட்டணே ரம்மே
  நாநாராமோப சோபிதே॥
கைலாச சிகராகார பாசாத பதிமண்டிதே॥

அச்சுத் அச்சுத விக்கந்தே
  களப்ர குலநந்தனே।
மஹீம் சமனு சாசந்தே
  ஆரத்தோ ச சமாபிதோ॥

## பல நாட்டுக் கலைஞர்கள் வாழ்ந்த புகார்

*மகத வினைஞரும், மராட்டக் கம்மரும்,*
*அவந்திக் கொல்லரும், யவனத் தச்சரும்,*
*தண் தமிழ் வினைஞர்-தம்மொடு கூடிக்*
*கொண்டு இனிது இயற்றிய, கண் கவர் செய்வினைப்*
*பவளத் திரள் கால், பல் மணிப் போதிகை,*
*தவள நித்திலத் தாமம் தாழ்ந்த*
*கோணச் சந்தி மாண் வினை விதானத்துத்,*
*தமனியம் வேய்ந்த வகை பெறு வனப்பிற்,*
*பைஞ் சேறு மெழுகாப் பசும் பொன் மண்டபம் –*

—*மணிமேகலை, 19, 107-115.*

## புகாரில் பல நாட்டுப் பொருள்கள்

*செல்லா நல் இசை அமரர் காப்பின்,*
*நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்*
*காலின் வந்த கருங் கறி மூடையும்,*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,*
*தென் கடல் முத்தும், குண கடற் றுகிரும்,*
*கங்கை வாரியும், காவிரிப் பயனும்,*
*ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்.*
*அரியவும், பெரியவும், நெரிய ஈண்டி,*
*வளந் தலைமயங்கிய நனந்தலை மறுகு.*

*பட்டினப்பாலை-வரி 184-193.*

# புகார் நகர வனங்கள்

இலவந்திகைச் சோலை :

அரசனுடைய பக்கத்தில் உள்ளோர் அங்கிருப்பர்.

உய்யானம் :

மனிதர் விரும்பாத, வண்டுகள் மொய்க்காத, மலர் மரங்கள் அங்குண்டு. அம்மலர்களைத் தேவர்களே விரும்புவர். பாசக்கையை உடைய பூதம் அவ்வனத்தைக் காக்கும்.

சம்பாதிவனம் :

சூரிய கிரணத்தால் இறகு இழந்த சம்பாதி என்ற கழுகு இருந்த, மிகவும் முதிய வனம். தீண்டி வருத்தும் தெய்வங்களால் காக்கப்பட்டது

உவவனம் :

தன்னகத்துள்ளோருடைய ஓசையை வெளிப்படுத்தாமல், உருவை மட்டும் வெளிக்காட்டும் பளிங்கு மண்டபம் ஒன்று அதன்கண் இருந்தது மண்டபத்தின் மத்தியில் மாணிக்கச் சோதி பரந்த தாமரைப் பீடிகை ஒன்றும் இருந்தது. அது மயன் என்னும் தெய்வத் தச்சனால் செய்யப்பட்டது.

கவேரவனம் :

காவிரியின் தந்தையாகிய கவேரன் இருந்த வனம். அதுவும் மிகவும் முதியது; தெய்வங்களால் காக்கப்பட்டது.

## பூம்புகாரில் இருந்த மன்றங்கள்

வெள்ளிடை மன்றம் :

பண்டகசாலைகளில் உள்ள பொதிகளின் மேல் அளவு, நிறை, எண் மூன்றையும் குறிக்கும் இலக்கங்களும், பெயரும் எழுதப்பட்டிருக்கும் அதைக் களவு செய்தால், அவன் கழுத்துக் கடுக்க தலையில் பொதியை ஏற்றி ஊரைச் சுற்ற வைக்கும் ஆதலால், கள்ளர் மனதால் நினைத்தாலே நடுக்கம் கொடுக்கும் வெளியான மன்றம் இது.

இலஞ்சி மன்றம் :

கூனர், குறளர், ஊமர், செவிடர், வியாதியாளர் முதலியோர் முழுகி, வலம் செய்து, நலம் பெறும் பொய்கை மன்றம் இது.

நெடுங்கல் நின்ற மன்றம் :

வஞ்சனைப்பட்டோர், நஞ்சுண்டு துயர முற்றோர், பாம்பு கடித்தோர், பேய் பிடித்தோர், முதலியோர் வந்து தொழ, அத்துயர் நீக்கும் நெடிய கல் நிற்கும் மன்றம்.

பூதச் சதுக்கம் :

தவவேடம் பூண்டு ஊரை ஏமாற்றுபவர், கணவரை ஏமாற்றித் திரியும் பெண்கள், அரசரைக் கீழாக எண்ணும் அமைச்சர், பிறர் மனைவியை விரும்புவான், பொய்ச் சாட்சிக் கூறுவான், புறஞ் சொல்வான் இவர்களைப் பாசத்தால் கட்டி இழுத்து நிலத்தில் புடைத்து உண்ணும் பூதத்தின் சதுக்கம்.

பாவை மன்றம் :

அரசனுடைய கோல் சிறிது கெட்டாலும், நியாயம் வழங்குவோர் நடுநிலை மாறி ஒரு மருங்கு கூறினாலும் கண்ணீர் உகுக்கும் பாவை மன்றம்.

## மருவூர்ப் பாக்கம்

வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்,
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்,
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்,
வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்,
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்,
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்,
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்,
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பைந்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்,
கஞ்சகாரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும்

பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
துன்னகாரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில் பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்

சிலப்பதிகாரம், 5, 7-39.

## பட்டினப்பாக்கம்

கோ வியல் வீதியும்; கொடித் தேர் வீதியும்
பீடிகைத் தெருவும்; பெருங்குடி வாணிகர்
மாட மறுகும்; மறையோர் இருக்கையும்
வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால் வகை தெரிந்த பன்முறை இருக்கையும்
திரு மணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொடு
அணிவளை போழுநர் அகன் வீதியும்
சூதர் மாகதர் வேதா ளிகரோடு
நாழிகைக் கணக்கர் நலம் பெறு கண்ணுளர்
காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்
பூவிலை மடந்தையர் ஏவல் சிலதியர்
பயில் தொழில் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி இருக்கையும்
கடும்பரி கடவுநர், களிற்றின் பாகர்
நெடுந் தேர் ஊருநர் கடுங்கண் மறவர்
இருந்து புறஞ் சுற்றிய பெரும்பாய் இருக்கையும்
பீடுகெழு சிறப்பில் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பில் பட்டினப் பாக்கம்.

—சிலப்பதிகாரம் 5, 40-58.

## மருவூர்ப்பாக்கம்

பண்டசாலைத் தெரு
மாளிகைத் தெரு
புகார் முகப் பக்கங்களில் யவனர் இருக்கை
பிற தேசிகள் பலரும் ஒரு நிலத்தாரைப் போல் வாழும்
அலைவாய்க் கரையிருப்பு
வண்ணம், சுண்ணம், சாந்து, பூ, புகை, விரை
முதலியவை விற்கும் நகர வீதி
பட்டு, பருத்தி நூல்களாலும், எலி மயிராலும்
ஆடை செய்வோர் தெரு
பட்டு, பவளம், சந்தனம், அகில், முத்து, மணி, பொன்
இவை விற்கும் அகன்ற மறுகு
தானியங்கள் குவித்து விற்கும் கூல வீதி
பிட்டு வாணிகர் தெரு
அப்ப வாணிகர் தெரு
கள் விற்கும் வலைச்சியர் தெரு
மீன் விற்கும் பட்டினவர் தெரு
உப்பு விற்கும் உமணர் தெரு
பஞ்சவாசம் விற்பார் தெரு
ஆட்டிறைச்சி வணிகர் தெரு
வெண்கலம் விற்பார் தெரு
செம்பு கொட்டிகள் தெரு
தச்சர் தெரு
கொல்லர் தெரு
சித்ரகாரிகள் தெரு

பாவை முதலிய செய்யும் மண்ணீட்டாளர் தெரு
தட்டார் தெரு
இரத்தினத் தட்டார் தெரு
தையற்காரர் தெரு
தோல் தைப்பவர் தெரு
கிழிந்த அணியாலும், நெட்டியாலும் பொய்க்கொண்டை
முதலிய செய்வார் தெரு
மற்றும் பல கைவினையாளர் தெரு

## பட்டினப்பாக்கம்

அரசப் பெருந் தெரு
கொடியணிந்த தேரோடும் வீதி
பீடிகைத் தெரு
வாணிகரது மாட மாளிகைத் தெரு
உழவர் தெரு (வேளாளர் தெரு)
மருத்துவர் தெரு
காலம் கணிப்போர் தெரு
முத்துக் கோப்போர் தெரு
வளை அறுப்போர் தெரு
நின்று அரசர் புகழ் பாடுவார் தெரு
இருந்து அரசர் புகழ் பாடுவார் தெரு
வைதாளி யாடுவார் தெரு
சோதிடம் சொல்பவர் தெரு
சாந்திக் கூத்தாடுவார் தெரு
களத்தாடும் கூத்திகள் தெரு
அகக் கூத்தாடும் பெண்டுகள் தெரு
குற்றேவல் மகளிர் தெரு
தோற்கருவி இசைப்பவர் தெரு
விழாக்களுக்கு முரசுகொட்டுவார் தெரு
ஒற்றர் தெரு
குதிரை வீரர் தெரு
யானைப் பாகர் தெரு
தேர்ப்பாகர் தெரு
காலாட் படையினர் தெரு